# அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை

**பாடம் 3**

## இயேசு கிறிஸ்து

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

# அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை

பாடம் 3

இயேசு கிறிஸ்து

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில்

உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட, எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்

**முன்னுரை** ........ 1
**தெய்வீகம்** ........ 2
  **தேவ குமாரன்** ........ 3
  **கர்த்தர்** ........ 7
**மனிதத்தன்மை** ........ 10
  **அனுபவங்கள்** ........ 11
    தலைமுறை ........ 11
    சரீரம் ........ 14
    ஆத்துமா ........ 15
    உயிர்த்தெழுதல் ........ 16
  **அலுவல்** ........ 18
    பழைய ஏற்பாட்டுப் பின்னணி ........ 18
    இயேசுவில் நிறைவேறுதல் ........ 21
  **இயல்பு** ........ 23
**வேலை** ........ 30
  **தாழ்த்துதல்** ........ 30
    அவதாரம் ........ 31
    பாடு ........ 34
  **உயர்த்தப்படுதல்** ........ 39
    உயிர்த்தெழுதல் ........ 40
    பரமேறுதல் ........ 42
    சிங்காசனத்தில் ஏறுதல் ........ 44
    நியாயத்தீர்ப்பு ........ 45
**முடிவுரை** ........ 47



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

கடந்த இரண்டு ஆயிரம் ஆண்டுகளாக, கோடிக் கணக்கான மக்கள் நசரேனாகிய இயேசுவை ஆராதித்து, பின்பற்றி, அவரைப் பற்றி பிறரிடம் அறிவித்துள்ளனர். வரலாற்றில் வேறு எந்த நபரும் பரவலாகப் இவரைப் போல போற்றப்படவில்லை அல்லது சமூகத்தில் அவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தவுமில்லை. கலைஞர்கள், இசைக்கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் அவரை அவர்களின் கலையில் உற்புகுத்தியுள்ளனர். அவரது போதனைகளைச் சுற்றி முழு தேசங்களும் கலாச்சாரங்களும் கட்டப்பட்டுள்ளன. உலகின் பல பகுதிகளில், நாள்காட்டி கூட அவர் பிறந்த காலத்திலிருந்து தான் கணக்கிடப்படுகிறது.

ஆனால் நன்கு அறியப்பட்டவராகிய இயேசுவை இன்னும் தீவிரமாக ஆய்வு செய்கின்றனர். எல்லா வகையான அறிஞர்களும் அவரை ஆராய்ச்சி செய்கிறார்கள். சந்தேகப்பேர்வழிகள் அவரை இழிவுபடுத்த முயற்சிக்கின்றனர். அவரைப் பின்பற்றுபவர்கள் கற்பனை செய்து பார்க்கக்கூடிய எல்லா வகையிலும் அவரைப் பற்றி படிக்கிறார்கள்.

உண்மை என்னவென்றால், இயேசுவைப் பற்றி கற்றுக்கொள்வது அனைவருக்கும் முக்கியமானது, ஏனென்றால் ஒரு நாள் நாம் அனைவரும் “இயேசு கிறிஸ்து யார்?” என்ற கேள்விக்கு பதிலளிக்க வேண்டியிருக்கும். கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை இதற்குரிய பதில் தெரிந்திருக்க வேண்டும், ஏனென்றால் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* பல நூற்றாண்டுகளாக அதைப் படித்து வருகிறோம்.

இது நம்முடைய *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* தொடரின் மூன்றாவது பாடமாகும், மேலும் அதற்கு “இயேசு கிறிஸ்து” என்று தலைப்பு வைத்துள்ளோம். இந்தப் பாடத்தில், திரித்துவத்தின் இரண்டாவது நபராகிய தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கையை உறுதிப்படுத்துகிற விசுவாசக் கட்டுரைகளில் நம் கவனத்தைத் திருப்புவோம். இந்த கட்டுரைகள் பின்வருமாறு கூறுகின்றன:

> அவருடைய ஒரே குமாரனும் நம் கர்த்தருமாகிய இயேசு
> கிறிஸ்துவை நான் விசுவாசிக்கிறேன்.
> அவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பம் தரிக்கப்பட்டு,
> கன்னி மரியாளுக்குப் பிறந்தார்.
> அவர் பொந்தியு பிலாத்துவின் கீழ் பாடு அனுபவித்து,
> சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, அடக்கம் செய்யப்பட்டார்;



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவர் பாதாளத்தில் இறங்கினார்.
மூன்றாம் நாள் அவர் மரணத்திலிருந்து மீண்டும்
உயிர்த்தெழுந்தார்.
அவர் பரத்திற்கு ஏறினார்
சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது
பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார்.
அங்கிருந்து அவர் ஜீவனுள்ளவர்களையும்
மரித்தவர்களையும் நியாயந்தீர்க்க வருவார்.

விசுவாச அறிக்கையானது இயேசுவைப் பற்றி என்ன சொல்கிறது என்பதைச் சுருக்கமாகக் கூற பல வழிகள் உள்ளன என்றாலும், இறையியல் வரலாறு முழுவதும் பொதுவான மையப் புள்ளிகளாக இருந்த மூன்று கருப்பொருள்களில் நம் கவனத்தை செலுத்துவோம். முதலாவதாக, அவருடைய தெய்வீக இயல்பு மற்றும் திரித்துவத்தின் மற்ற உறுப்பினர்களுடனான அவரது உறவு போன்ற விஷயங்களைப் பார்த்து, இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையைப் பற்றி பேசுவோம். இரண்டாவதாக, அவருடைய மனித இயல்பைப் பற்றி பார்ப்போம், அவருடைய தெய்வீக மற்றும் மனித இயல்புகளுக்கு இடையிலான உறவைப் பற்றியும் விவாதிப்போம். மூன்றாவதாக, அவருடைய பூமிக்குரிய ஊழியத்தின் போது அவர் செய்த பணியை மட்டுமல்ல, அதற்குப் பிறகு அவர் செய்த பணியைப் பற்றியும் பேசுவோம். இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* பேசப்பட்ட விதத்திலிருந்து ஆரம்பிக்கலாம்.

# தெய்வீகம்

கிறிஸ்துவின் தெய்வீகத்தைப் பற்றி நாம் பேசும்போது, அல்லது இன்னும் சரியாகச் சொன்னால், கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மை – அதாவது அவர் முழுக்க முழுக்க தேவன் என்கிற உண்மை – கிறிஸ்து யார் என்பதைப் பற்றிய புதிய ஏற்பாட்டின் மையக் கருத்தைப் பற்றி பேசுகிறோம். இயேசு முழுக்க முழுக்க தேவனாகவும் முழு மனிதனாகவும் இருக்கிறார் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த இரண்டிலிருந்தும் நாம் பின்வாங்கினால் நம்மிடம் இருப்பவர் இயேசுவாக இருக்க முடியாது. இயேசுவை அவரது தெய்வீகத்தன்மையின் அடிப்படையில் நாம் விளக்குவதற்கு ஒரே வழி வேதாகமம் அவரை அறிவிக்கிற விதமாகவே அறிவிப்பது தான். அவர் ஜீவனுள்ள தேவனின் குமாரன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> என்று நமக்குக் கூறப்படுகிறது. ஆரம்பகால சபை பிரசங்கித்த மிக அடிப்படையான உண்மை இதுவாகும். அப்போஸ்தலனாகிய பவுல் நமக்குக் கொடுக்கிற ஒரு உதாரணத்தைப் பார்க்கலாம் – அவர் கொலோசெயரில் இவ்வாறு எழுதுகிறார் – உண்மையில் அவர் (இயேசு) எல்லாவற்றிற்கும் மேலான வல்லவர் என்பதே நமது உறுதியாக இருக்கிறது. அவருக்குள் எல்லாம் சிருஷ்டிக்கப்பட்டது. எல்லா அதிகாரங்களும் அவருடைய காலடியில் உள்ளன. தேவனைப் பற்றி மட்டுமே இது சொல்லப்பட முடியும். நீங்கள் அதை வெளியே எடுத்துப் போட்டால், நமக்கு சுவிசேஷம் இல்லை, நமக்கு இயேசுவும் இல்லை கிறிஸ்தவமும் இல்லை.
>
> – Dr. ஆர். ஆல்பர்ட் மோஹ்லர், Jr.

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* இந்த வார்த்தைகளில் இயேசுவின் தெய்வீகத்தன்மையைக் குறிப்பிடுகிறது:

> அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நான் விசுவாசிக்கிறேன்.

இயேசுவின் தெய்வீகத்தன்மையைக் குறிக்க கிறிஸ்தவர்கள் எப்போதும் “கிறிஸ்து,” “தேவனுடைய குமாரன்”, “கர்த்தர்” போன்ற சொற்களை கருத்தில் கொண்டுள்ளனர்.

நம் நோக்கங்களுக்காக, இயேசுவின் தெய்வீகத்தன்மையை சுட்டிக்காட்ட *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* பயன்படுத்தும் இரண்டு வார்த்தைகளில் கவனம் செலுத்துவோம். ஒருபுறம், இயேசு தேவனுடைய குமாரன் என்ற உண்மையைப் பார்ப்போம். மறுபுறம், இயேசு கர்த்தராக இருப்பதன் அர்த்தம் என்ன என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்போம். வேதாகமம் இயேசுவுக்கு கொடுக்கும் “தேவ குமாரன்” என்ற பதத்தின் அர்த்தத்துடன் ஆரம்பிக்கலாம்.

## தேவ குமாரன்

”தேவனுடைய குமாரன்” என்ற மொழியைப் பற்றி நாம் முதலில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், எந்த வகையிலும் தெய்வீகமற்றவர்களைப் பற்றி பேசுவதற்கு வேதம் பெரும்பாலும் அதைப் பயன்படுத்துகிறது. உதாரணமாக, யோபு 1:6 மற்றும் 2:1 போன்ற வேத பகுதிகளில் தேவதூதர்கள் தேவ குமாரர்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். வேதாகமத்தின் சில நவீன பதிப்புகளில், இந்த வசனங்களில் தேவ குமாரர்கள்

என்கிற பதம் உபயோகிக்கப்படாமல் “தேவதூதர்கள்” என்ற பதம் மொழிப்பெயர்ப்பில் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆனால் யோபு புத்தகத்தின் வேத பகுதிகளில், எபிரெய மொழி உண்மையில் *“பெனாய் ஹலோஹிம்”* என்று கூறுகிறது, அதாவது “தேவனுடைய குமாரர்கள்” என்று பொருள். இதே போன்ற மொழி நடையை மற்ற வேத பகுதிகளிலும் காண்கிறோம்.

யாத்திராகமம் 4:22, மற்றும் ஓசியா 11:1 போன்ற வசனங்களில் இஸ்ரவேல் தேசமும் தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்படுகிறது. இஸ்ரவேலின் ராஜாக்கள் கூட 2 சாமுவேல் 7:14, மற்றும் சங்கீதம் 2:7 போன்ற இடங்களில் தேவனுடைய குமாரர்கள் என்று குறிப்பிடப்பட்டனர். முதல் மனிதனான ஆதாம் லூக்கா 3:38 இல் தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்படுகிறான்.

எல்லா கிறிஸ்தவர்களுக்கும் தெரிந்தது போல, வேதத்தில் பல பகுதிகளில் தேவனுடைய உண்மையுள்ள விசுவாசிகள் அவருடைய குமாரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இதை மத்தேயு 5:9, 45, லூக்கா 20:36, ரோமர் 8:14, 19 போன்ற இடங்களில் காண்கிறோம். **பவுல் கலாத்தியர் 3:26 இல் எழுதியது போல:**

> நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. (கலாத்தியர் 3:26).

ஆனால் ”தேவ குமாரன்” என்ற பட்டத்திற்கு இயேசு தெய்வீகமானவர் என்று அர்த்தமல்ல என்றால், சபையானது ஏன் அதை இவ்வளவு முக்கியப்படுத்தியது?

புதிய ஏற்பாடு இயேசுவைப் பற்றி எவ்வாறு பேசுகிறது என்பதைப் பார்க்கும்போது, அவர் ஒரு தனித்துவமான வழியில் தேவனுடைய குமாரன் என்பது தெளிவாகிறது.

> உண்மையில், புதிய ஏற்பாட்டில் நாம் காணும் மிக உறுதியான விஷயங்களில் ஒன்று, இயேசு தேவனுடைய விசேஷித்த குமாரன் என்பதாகும். தேவன் யார் என்பதன் சாராம்சம் அவருக்குள்ளும் இருக்கிறது. அல்லது அதை வேறு விதத்தில் கூறினால், இயேசு தேவனின் தேவனாகவே இருக்கிறார். நாம் அவருடன் கொண்டிருக்கிற உறவின் மூலமும், அவர் நம்மை தத்தெடுத்திருப்பதன் மூலமும் தேவனின் பிள்ளைகளாக இருக்கிறோம், ஆனால் அவருடைய சாராம்சத்தால் நாம் அவருடைய பிள்ளைகள் அல்ல. இயேசு தேவனுடைய நித்திய குமாரன். அவர் எப்போதும் தேவனின் குமாரனாக இருந்து வருகிறார்.
>
> Dr. தாமஸ் ஆர். ஸ்கிரைனர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயேசுவின் தனித்துவமான குமாரத்துவம் குறிப்பாக யோவான் சுவிசேஷத்தில் தெளிவாக உள்ளது. உதாரணமாக, யோவான் 1:1-18 இல், இயேசு தேவனின் நித்திய வார்த்தை என்று நமக்குக் கூறப்படுகிறது, அதாவது அவர் தேவனென்றும், பிதாவின் ஒரேபேறானவர் என்றும் இதற்கு அர்த்தம். பிதாவின் குமாரனாகிய அவர் மேலே இருந்து வந்தார் என்றும் அவர் இந்த உலகிலிருந்து தோன்றவில்லை என்றும் இயேசு சொன்னார் என்பதை யோவான் 8:18-23 இல் காண்கிறோம். யோவான் 10:30 இல் நானும் பிதாவும் ஒன்று என்று இயேசு வலியுறுத்தினார்.

ஆனால் யோவான் இதைத் தெளிவுபடுத்திய இடம் யோவான் 5:18 ஆக இருக்கலாம். அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்:

> [இயேசு] தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ்சொல்லித் தம்மை தேவனுக்குச் சமமாக்கினார் (யோவான் 5:18).

இயேசு தன்னை தேவனுடைய குமாரன் என்று பேசியபோது, அவர் பிதாவாகிய தேவனுடன் சமமாக இருக்கிறார் என்று சொன்னார் என்பதை இந்த வேத பகுதி தெளிவுபடுத்துகிறது. இந்த காரணத்திற்காக, *இயேசு* தேவனுடைய குமாரன் என்று வேதம் சொல்லும்போது, அவர் தனித்துவமானவராகவும் *தெய்வீகமானவராகவும்* இருக்கிறார் என்று அர்த்தம் என்பதை கிறிஸ்தவர்கள் சரியாக புரிந்து கொண்டுள்ளனர்.

இயேசுவின் தெய்வீக குமாரத்துவம் பல புதிய ஏற்பாட்டு பகுதிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ரோமர் 1:3-4, மற்றும் 8:3 ல் நாம் இதை காண்கிறோம்,இயேசு மனித அவதாரத்தை எடுப்பதற்கு முன்பே அவர் தேவனுடைய தெய்வீக குமாரன் என்று பவுல் போதித்தார். எபிரெயர் 1:1-3 இல் நாம் காண்கிறோம், அங்கு தேவனுடைய குமாரனாக, இயேசு பிரபஞ்சத்தைப் சிருஷ்டித்தார் என்றும் அவர் பிதாவினுடைய இருப்பின் சரியான பிரதிநிதியாவார் என்றும் சொல்லப்படுகிறது. இவற்றிலும் இன்னும் பல இடங்களிலும், இயேசு தேவனுடைய குமாரன் என்று விசேஷித்த வகையில் அடையாளம் காணப்படுகிறார், இது அவருடைய நித்திய, தெய்வீக இயல்பைக் குறிக்கிறது.

தெய்வீக மற்றும் நித்திய குமாரனாக இயேசுவுக்கு கொடுக்கப்படும் இந்த முக்கியத்துவம் திரித்துவத்தின் கோட்பாட்டில் பிரதிபலிக்கிறது, இது பின்வருமாறு கூறுகிறது:

> தேவன் மூன்று நபர்களாக இருக்கிறார், ஆனால் ஒரே சத்துவமுடையவராக இருக்கிறார்.

திரித்துவத்தின் மூன்று நபர்களில் ஒருவரான இயேசு தேவனுடைய குமாரன் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. ஆனால் பிதாவுடனும் பரிசுத்த ஆவியுடனும் அவருக்கு இருக்கிற உறவு என்ன?



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முந்தைய பாடங்களில் நாம் விவாதித்தபடி, திரித்துவத்தைப் பற்றிய இயக்கவியல் முன்னோக்கு தேவனுடைய இருப்பு மற்றும் அவர் இருக்கிறார் என்பதை மையமாகக் கொண்டுள்ளது. தேவனுடைய குமாரனாக, கிறிஸ்து பிதாவுக்கும் பரிசுத்த ஆவிக்கும் வல்லமையிலும் மகிமையிலும் சமமாக இருக்கிறார். குமாரன் உட்பட – தேவனிலுள்ள மூன்று நபர்களும் – எல்லையற்றவர்களும், நித்தியமானவர்களும் மற்றும் மாறாதவர்களுமாயிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஞானம், வல்லமை, பரிசுத்தம், நீதி, நற்குணம் மற்றும் உண்மை போன்ற அடிப்படை தெய்வீக குணாதிசயங்களைக் கொண்டுள்ளனர்.

இதற்கு மாறாக, திரித்துவத்தின் பொருளாதார முன்னோக்கு தேவனின் நபர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு தொடர்பு கொள்கிறார்கள் என்பதை விவரிக்கிறது. இந்த பார்வையிலிருந்து, ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு பொறுப்புகளும், வெவ்வேறு நிலைகளும் மற்றும் வெவ்வேறு ஒதுக்கப்பட்ட பாத்திரங்களும் உள்ளன என்பதை அறிய முடியும். உதாரணமாக, கிறிஸ்து எப்போதுமே பிதாவின் குமாரனாகவும், பிதாவின் அதிகாரத்திற்கு தன்னை கீழ்படுத்தினவராகவும் இருந்திருக்கிறார். **யோவான் 6:38 இல் இயேசு சொன்னதைக் கவனியுங்கள், அங்கு** அவர் பிதாவுக்கு தன்னை கீழ்படுத்தினதை விவரித்தார்:

> என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன் (யோவான் **6:38**).

யோவான் 8:28-29 இல் அவர் இதேபோன்ற கூற்றைக் கூறினார், அங்கு இந்த வார்த்தைகளைப் வாசிக்கிறோம்:

> இயேசு இவ்வாறு கூறினார் … "நான் என்சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன். என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார்; பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியே இருக்கவிடவில்லை" (யோவான் 8:28-29).

புதிய ஏற்பாடு முழுவதும் குமாரன் பிதாவின் அதிகாரத்திற்கு கீழ்பட்டவராக இருக்கிறார். அவர்களுக்கு இடையே எந்த முரண்பாடும் இல்லை, ஏனென்றால் குமாரனும் பிதாவும் எப்போதும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் உயர்ந்த இடம் பிதாவுக்கு சொந்தமானது.

இதேபோல், திரித்துவத்தின் பொருளாதாரத்திற்குள், குமாரனுக்கு பரிசுத்த ஆவியானவரின் மீது அதிகாரம் உண்டு. உதாரணமாக, யோவான் 15:26 இல் உள்ள இயேசுவின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிற தேற்றரவாளன் வரும்போது … அவர் என்னைக்குறித்துச் சாட்சிகொடுப்பார் (யோவான் 15:26).

ரோமர் 8:9 மற்றும் 1 பேதுரு 1:11 போன்ற பிற வேத பகுதிகளில், பரிசுத்த ஆவியானவர் உண்மையில் “கிறிஸ்துவின் ஆவி” என்று அழைக்கப்படுகிறார், ஆவியானவர் கிறிஸ்துவால் அனுப்பப்பட்டார் என்பதை மீண்டும் இது குறிக்கிறது.

இந்த உறவுகள் திரித்துவத்தின் இரண்டாவது நபராக குமாரனை அடையாளம் காண்பதில் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவர் இயக்கவியல் திரித்துவத்தின் இரண்டாவது நபர் ஆவார், ஏனென்றால் அவர் பிதாவாகிய முதல் நபரிலிருந்து வருகிறார், அவர் பரிசுத்த ஆவியானவராகிய மூன்றாவது நபரை வெளிவிடுகிறார். அவர் பொருளாதாரத் திரித்துவத்தின் இரண்டாவது நபர் ஆவார், ஏனெனில் அவர் நடுத்தர பதவியை வகிக்கிறார். அவர் பிதாவுக்கு கீழ்ப்பட்டவர், ஆனால் பரிசுத்த ஆவியின் மீது அவருக்கு அதிகாரம் உண்டு.

ஆரம்பகால சபையில், இயேசு கிறிஸ்து முழு தெய்வீகமுடையவராக இருந்தார் என்ற அறிக்கை கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கியமான அம்சமாகும். ஞானஸ்நானத்தில் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையை* அறிக்கையிட்டவர்கள் திரித்துவத்தின் உள் செயல்பாடுகள் தொடர்பாக இறையியலின் அனைத்து விசேஷித்த விவரங்களையும் உறுதிப்படுத்த வேண்டியது அவசியமில்லை. ஆனால் அவர்கள் தயக்கமின்றி கிறிஸ்துவின் தெய்வீகத்தை அறிவிக்க எதிர்பார்க்கப்பட்டார்கள். இன்றும், இயேசுவை உண்மையாகவும் முழுமையாகவும் தேவன் என்பதை உறுதிப்படுத்துவது வேதாகம கிறிஸ்தவத்தின் ஒரு அடையாளமாகும்.

”தேவ குமாரன்” என்ற வார்த்தைகளின் முக்கியத்துவத்தை இப்போது நாம் கவனித்துள்ளோம், ”கர்த்தர்” என்ற பட்டம் இயேசுவின் தெய்வீகத்தை எவ்வாறு சுட்டிக்காட்டுகிறது என்பதைப் பார்க்க நாம் தயாராக இருக்கிறோம்.

## கர்த்தர்

புதிய ஏற்பாடு இயேசுவை கர்த்தர் என்று அழைக்கும்போது, அது *குரியோஸ்* என்கிற கிரேக்க வார்த்தையை மொழிப்பெயர்க்கிறது. *குரியோஸ்* என்பது ஆட்சியாளர் அல்லது குரு என்று பொருள்படும் ஒரு பொதுவான வார்த்தையாகும், மேலும் இது “ஐயா” என்று ஆங்கிலத்தில் அழைக்கும் வார்த்தையைப் போல ஒரு கண்ணியமான அழைப்பாகவும் பயன்படுத்தப்பட்டது. மத்தேயு 10:24, லூக்கா 12:36-47, எபேசியர் 6:5-9, மற்றும் வேறு பல இடங்களில் உள்ளதைப் போலவே, *குரியோஸ்* வெறும் மனிதர்களைக் குறிப்பதற்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அதே சமயம், மத்தேயு 11:25, லூக்கா 1:16, அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:39 மற்றும் பல வேத பகுதிகளைப் போலவே புதிய ஏற்பாடும் *குரியோஸ்* என்ற வார்த்தையை தேவனின் பெயராகப் பயன்படுத்தியது. இந்த வரம்பின் அர்த்தத்தைக் கருத்தில் கொண்டு, புதிய ஏற்பாட்டில் *குரியோஸ்* என்ற வார்த்தையின் பயன்பாடு இயேசு தெய்வீகமானவர் என்பதைக் குறிக்கிறது என்று நாம் ஏன் நினைக்க வேண்டும்? அது அவருடைய பூமிக்குரிய அதிகாரம் அல்லது கனத்தைக் குறிக்கிறது என்று நாம் ஏன் நினைக்கக்கூடாது?

> *குரியோஸ்* என்ற வார்த்தையின் கிறிஸ்தவ பயன்பாட்டிற்கான திறவுகோல் பழைய ஏற்பாடாகும். பழைய ஏற்பாட்டு வேத பகுதிகள் எபிரெய மொழியில் எழுதப்பட்டன. ஆயினும், கிறிஸ்து பிறப்பதற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு, எபிரெய உரை கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. இந்த மொழிபெயர்ப்பு செப்டுவஜின்ட் என்று அழைக்கப்படுகிறது. யூத வேத அறிஞர்கள் பழைய ஏற்பாட்டை கிரேக்க மொழியில் மொழிப்பெயர்த்தபோது, தேவன் தனது ஜனங்களுக்கு வெளிப்படுத்திய பரிசுத்தமான பெயரை மொழிப்பெயர்க்க குரியோஸ் என்ற கிரேக்க வார்த்தையை 6,700 முறை பயன்படுத்தினார்கள்: யேகோவா. இயேசுவைக் குறிக்கிற குரியோஸ் என்கிற வார்த்தையை புதிய ஏற்பாடு அறிக்கையிடுவதைப் புரிந்துகொள்ள இந்த பின்னணி முற்றிலும் முக்கியமானது. குரியோஸ் என்ற வார்த்தை இயேசு தெய்வீகமானவர் என்பதைக் குறிக்க அவசியமில்லை என்றாலும், இந்த வார்த்தையை அதன் பழைய ஏற்பாட்டின் பின்னணியில் பயன்படுத்துவது பல வேத பகுதிகளில் இயேசுவின் தெய்வீகத்தன்மையை தெளிவாக குறிக்கிறது.
>
> Dr. கெய்த் ஜான்சன்

> “முழங்கால் யாவும் முடங்கும்படிக்கு பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்” என்கிற புதிய ஏற்பாட்டின் மிக அற்புதமான வேத பகுதிகளில் ஒன்றில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது [பிலிப்பியர் 2]. உண்மையில், பவுல், அந்த நேரத்தில் ஏசாயாவிலிருந்து மேற்கோள் காட்டுகிறார், அது யேகோவா கர்த்தர் என்று எல்லோரும் அறிக்கையிடுவார்கள் என்கிற துதி பாடலாகும். இப்போது, அவர் வேண்டுமென்றே அந்த பழைய ஏற்பாட்டு பகுதியை எடுத்து இயேசு கிறிஸ்து கர்த்தர் என்று கூறுகிறார். அந்த நேரத்தில் புதிய ஏற்பாடு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இயேசு கிறிஸ்து ஒரு குரு மட்டுமல்ல, அவர் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தராக அடையாளம் காணப்பட வேண்டும் என்று கூறுகிறது.
>
> Dr. பீட்டர் வாக்கர்

ரோமர் 10:9, 13 இல் பவுல் எழுதியதைக் கவனியுங்கள்:

> ”கர்த்தராகிய இயேசுவை” நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.... ஆதலால், ”கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்” (ரோமர் 10:9, 13).

இந்த வேத பகுதியின் 13 வது வசனத்தில், இயேசுவின் நாமத்தை தொழுதுகொள்ளுகிற  அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள் என்பதை நிரூபிக்க பவுல் யோவேல் 2:32 யை மேற்கோள் காட்டினார். ஆனால் எபிரெய மொழியில் உள்ள பழைய ஏற்பாட்டில் யோவேலின் இந்த வசனத்தில், கர்த்தருடைய பெயர் யேகோவா ஆகும்.  இது தேவனுடைய பொதுப் பெயராகும். எளிமையாகச் சொல்வதானால், இயேசு கர்த்தர் என்று பவுல் சொன்னபோது, இயேசு பழைய ஏற்பாட்டின் கர்த்தரும் தேவனுமாகிய யேகோவா என்கிற அர்த்தத்தில் சொன்னார்.

பழைய ஏற்பாட்டில் இயேசுவை தேவனுடன் ஒப்பிடும் பிற புதிய ஏற்பாட்டு பகுதிகள் மத்தேயு 3, மாற்கு 1, லூக்கா 3 மற்றும் யோவான் 1 ஆகியவை, அங்கு இயேசு ஏசாயா 40 லிருந்து கர்த்தர் என்று குறிப்பிடப்படுகிறார், அவருடைய வழியைத் தான் யோவான் ஸ்நானகன் ஆயத்தம் செய்தார். எபிரெயர் 1:10 இல் அதே தன்மையைக் காண்கிறோம், அங்கு கர்த்தராகிய இயேசு தேவனென்று கூறப்படுகிறார், சங்கீதம் 102:24-25 உலகை அவர் சிருஷ்டித்ததாக கூறுகிறது. இந்தப் பட்டியல் தொடர்ந்து செல்லக்கூடும்.

புதிய ஏற்பாட்டில் இருந்த ஜனங்கள் இயேசுவை “கர்த்தர்” என்று அழைத்த ஒவ்வொரு முறையும் அவருடைய தெய்வீகத்தன்மையை அங்கீகரித்தார்கள் என்று கூற முடியாது. சில நேரங்களில் அவர்கள் வெறுமனே அவருக்கு மனித ரீதியிலான மரியாதை காட்ட வேண்டும் என்று நினைத்தார்கள். ஆனால், *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* நாம் செய்வது போல, இயேசு கர்த்தர் என்று சபை முறையாக அறிக்கையிடும்போது, இயேசு கிறிஸ்து தேவன் என்றும், பிதாவும் ஆவியானவரும் கொண்டிருக்கிற அதே தெய்வீக குணாதிசயங்களையும் கொண்ட தேவனாக அவர் திரித்துவத்தின் முழு உறுப்பினராக இருக்கிறார் என்கிற வேதாகம போதனையையும் உறுதிப்படுத்துகிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கிறிஸ்துவின் தெய்வீகம் கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தேவையான எல்லா வகையான பாடங்களையும் கொண்டுள்ளது. உதாரணமாக, நம்முடைய ஜெபங்களிலும் பாடல்களிலும் இயேசுவை தேவனாக ஏற்றுக்கொண்டு ஆராதிக்க வேண்டும் என்பதே இதன் அர்த்தம் ஆகும். பிதாவிடமும் ஆவியானவரிடமும் நாம் ஜெபிப்பது போலவே அவரிடமும் ஜெபிக்க வேண்டும் என்பதே இதன் அர்த்தம் ஆகும். தேவன் தாமே நம்மை பாவத்திலிருந்து மீட்டுக்கொண்டார் என்பதை அறிந்துகொண்டு, நம்முடைய இரட்சிப்பின் பாதுகாப்பில் நாம் மிகுந்த ஆறுதலடைய முடியும் என்பதே இதன் பொருள் ஆகும். கிறிஸ்தவ வாழ்க்கையில் இவை போன்ற பல நடைமுறைக் காரியங்கள் இயேசு தெய்வீகமானவர் என்ற நம்பிக்கையில் நிலை நிற்கின்றன.

இயேசுவின் தெய்வீகத்தைப் பற்றிய இந்த புரிதலை மனதில் கொண்டு, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* அவருடைய மனிதத்தன்மையை பிரதிபலிக்கும் விதத்தில் நம் கவனத்தைத் திருப்ப நாம் தயாராக இருக்கிறோம்.

# மனிதத்தன்மை

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில், பல இறையியலாளர்கள் இயேசு மனிதன் என்பதை உடனடியாக ஏற்றுக்கொண்டனர், ஆனால் அவர்கள் அவருடைய *தெய்வீகத்தன்மையைக்* குறித்து கேள்விகள் கேட்டனர். ஆனால் சபையின் ஆரம்ப நூற்றாண்டுகளில், குறைந்தபட்சம் இயேசுவின் *மனிதத்தன்மையை* மக்கள் கேள்விக்குள்ளாக்குவது பொதுவானதாக இருந்தது. அன்றைய செல்வாக்குமிக்க தத்துவங்கள் ஒரு தேவன் தன்னை ஒரு *மாறுவேடமிட* முடியும் என்பதை மக்கள் எளிதாக ஏற்றுக்கொள்ள வைத்தன. ஆனால் ஒரு தேவன் உண்மையில் *மனிதனாக* முடியும் என்ற கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்வது மிகவும் கடினமாக இருந்தது. மனிதர்கள் சரீரம் மற்றும் உணர்ச்சியுடையவர்களாக இருந்தனர். தேவன் ஒரு தாழ்ந்த, சிருஷ்டிக்கப்பட்ட, மனிதத்தன்மையைப் எடுத்து தனது சொந்த மகிமையையும் கண்ணியத்தையும் சமரசம் செய்ய மாட்டார் என்பது அவர்களது மதிப்பீடு. அதன் அனைத்து பலவீனங்களோடும், வரம்புகளோடும், நடத்தை பலவீனங்களோடும் குமாரனாகிய தேவன் பூமிக்கு வந்து முழு மனிதத்தன்மையை பெற முடியும் என்று நம்புவதில் வருத்தப்படும் விதமாக பல நவீன கிறிஸ்தவர்களுக்கும் சிக்கல் உள்ளது.

இயேசு ஒரு முழு மனிதர் என்பதை நிரூபிக்க, அவருடைய மனிதத்தன்மையின் மூன்று பரந்த அம்சங்களைப் பற்றி விவாதிப்போம். முதலில், அவருடைய மனித அனுபவங்களைப் பற்றி பேசுவோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இரண்டாவதாக, அவருடைய மனித அலுவல்கள் பற்றி விவாதிப்போம். மூன்றாவதாக, அவருடைய மனிதத்தன்மை பற்றியும் அவரது தெய்வீக இயல்புடனான உறவு பற்றியும் சில வார்த்தைகளைச் சொல்வோம். *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* பட்டியலிடப்பட்டுள்ள அவரது மனித அனுபவங்களைப் பார்ப்பதன் மூலம் ஆரம்பிக்கலாம்.

## அனுபவங்கள்

இயேசுவின் பல அனுபவங்கள் அவர் உண்மையிலேயே மனிதர் என்பதை நிரூபிக்கின்றன, ஏனெனில் மனிதர்களுக்கு மட்டுமே இத்தகைய அனுபவங்கள் இருக்கும். விசுவாச அறிக்கையிலிருந்து பின்வரும் கூற்றுக்களைக் கவனியுங்கள்:

> [இயேசு] பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரிக்கப்பட்டு,
> கன்னி மரியாளுக்குப் பிறந்தார்.
> அவர் பொந்தியு பிலாத்துவின் கீழ் பாடு அனுபவித்து,
> சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, அடக்கம் செய்யப்பட்டார்;
> அவர் பாதாளத்தில் இறங்கினார்.
> மூன்றாம் நாள் அவர் மரணத்திலிருந்து மீண்டும்
> உயிர்த்தெழுந்தார்.

இந்த அனுபவங்கள் இயேசுவினுடைய மனிதத்தன்மையின் குறைந்தது நான்கு அம்சங்களை (அவருடைய தலைமுறை, சரீரம், ஆத்துமா மற்றும் உயிர்த்தெழுதல்) உறுதிப்படுத்துகின்றன. அவர் கருவில் உருவானது பற்றியும் அவரின் பிறப்பைப் பற்றியும் அவரது தோற்றத்தைப் பார்ப்பதன் மூலம் தொடங்குவோம்.

### தலைமுறை

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* இந்த வார்த்தைகளால் இயேசுவின் தலைமுறையைப் பற்றி பேசுகிறது:

> [அவர்]பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரிக்கப்பட்டு,
> கன்னி மரியாளுக்குப் பிறந்தார்.

இயேசு கருவில் உற்பத்தியானதைப் பற்றியும் அவரின் பிறப்பைப் பற்றியும் சில அசாதாரண விவரங்கள் இருந்தன என்பது ஒப்புக்கொள்ளத்தக்கது. முதலாவதாக, அவர் ஒரு மனித தகப்பனால் கருத்தரிக்கப்படாமல் பரிசுத்த ஆவியினால் கருத்தரிக்கப்பட்டார். அவர் தனது தாயின் கன்னித்தன்மை போகாத விதத்தில் கருத்தரிக்கப்பட்டார். இந்த விவரங்களைப் பற்றி இந்த பாடத்தில் பின்னர் விரிவாகப் பேசுவோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இப்போதைக்கு, கருத்தரித்தல் மற்றும் பிறப்பு பற்றிய அடிப்படைக் கருத்துக்களின் அடிப்படையில் அத்தியாவசிய மனித அனுபவங்களாக அவைகளில் கவனம் செலுத்த விரும்புகிறோம்.

ஆதாம் மற்றும் ஏவாளுக்குப் பிறகு எல்லா மனிதர்களும் தாயின் வயிற்றில் ஒரு சிறிய குழந்தையாக உருவாகத் தொடங்கிய அதே வழியில் தான் இயேசுவும் உருவாகத் தொடங்கினார் என்பதையே இயேசு "கருத்தரிக்கப்பட்டார்" என்று *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* கூற வருகிறது. மத்தேயு 1:18, லூக்கா 2:5-6; கலாத்தியர் 4:4 மற்றும் எபிரெயர் 10:5 ஆகிய வேத பகுதிகள் ஒவ்வொரு மனிதக் குழந்தையையும் உருவாக்கும் விதத்தில் தான் மரியாளின் வயிற்றில் தேவன் இயேசுவை உருவாக்கினார் என்பதைக் குறிக்கின்றன.

மரியாள் கர்ப்பந்தரித்தல் தொடர்பாக மரியாளுக்கும் காபிரியேல் தூதனுக்கும் இடையிலான இந்த உரையாடலை லூக்கா 1:34-37 பதிவு செய்கிறது:

> அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: "இது எப்படியாகும்?" "புருஷனை அறியேனே" என்றாள். தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: "பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்... தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை" (லூக்கா 1:34-37).

இந்த வழியில் ஒரு குழந்தையை கருத்தரிப்பது என்பது ஒரு அற்புதமாகத் தான் இருக்கும் என்பதை மரியாள் உணர்ந்திருந்தாள். அவளுக்கு கிடைத்தது ஒரு அற்புதம் தான்.

> இயேசு அற்புதம் நிறைந்த விதத்தில் கருத்தரித்ததன் நோக்கம் என்னவென்றால், அவர் முழு தேவனாகவும், முழு மனிதராகவும் இருப்பதை உறுதி செய்வதாகும், ஆனால் அது அவரை முழு மனிதனுக்கும் குறைவாக ஆக்காது. கருத்தரித்தல் ஒரு அற்புதம் என்பது உண்மைதான், மீட்பின் வரலாறு இதுவரை கண்டிராத மிகப்பெரிய அற்புதங்களில் இது ஒன்றாகும். இயேசு கருவில் உருவானதிலிருந்து, கருவில் அவரது வளர்ச்சி மற்ற மனிதர்களைப் போலவே இருந்தது. பிறப்பு கால்வாய் வழியாக அவர் கடந்து சென்றார்: சாதாரண மனித பிறப்புக்குரிய செயல்முறையாகவே அது இருந்தது. அவர் தனது ஊட்டச்சத்துக்காகவும், உணவுக்காகவும் தனது தாயைச் சார்ந்து இருந்தார், மேலும் மூக்கு ஒழுகுதல் முதல் அவரது அழுக்குத் துணிகளை மாற்றுவது வரை அனைத்தும் சாதாரண மனித அனுபவமாகவே இருந்தன. அவர் மனிதனை விட



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மேலானவர், ஆனால் ஒரு முழு மனிதனுக்கு குறைவானவர் அல்ல.

Dr. ராபர்ட் ஜி. லிஸ்டர்

இயேசுவுக்கு ஒரு மனித தகப்பன் இல்லாததால் அவர் உண்மையிலேயே மனிதனாக இருக்க முடியாது என்று சில நேரங்களில் வாதிடப்படுகிறது. ஆனால் முதல் மனிதர்களுக்கும் தந்தைகளோ அல்லது தாய்களோ கிடையாது. ஆதியாகமம் 2 நமக்குச் சொல்வது போல், ஆதாம் பூமியின் தூசியிலிருந்து உருவாக்கப்பட்டான், ஏவாள் ஆதாமின் விலா எலும்பிலிருந்து சிருஷ்டிக்கப்பட்டாள். இருவரும் பெற்றோர்கள் இல்லாமல் தான் இருந்தனர். அவர்களில் யாரும் பெண்ணிலிருந்து பிறக்கவில்லை. ஆனால் அவர்கள் இருவரும் முழுமையாகவும் உண்மையான மனிதர்களாகவும் இருந்தனர். அதேபோல், இயேசு கருவில் உருவான விதம் வழக்கத்திற்கு மாறாக இருந்தபோதிலும் முழு மனிதனாக இருந்தார்.

வேதத்திலிருந்து நமக்குத் தெரிந்த எல்லாவற்றிலிருந்தும் பார்க்கும்போது, மரியாளின் கருப்பையில் இயேசுவின் வளர்ச்சி ஒரு முழுமையான இயற்கையான நிகழ்வாக இருந்தது, இது அவருடைய பிறப்பில் முடிந்தது. அவர் பிறந்த நேரத்தில் அவர் மாயமாக தோன்றவோ அல்லது சொர்க்கத்திலிருந்து இறங்கவோ இல்லை. மாறாக, மத்தேயு 1 மற்றும் லூக்கா 2 ஆகியவை மரியாளின் கர்ப்பம் முதலில் கண்டறியப்படவில்லை என்பதைக் குறிக்கிறது, ஆனால் பின்னர் அது தெரிய வந்தது. ஒரு சொப்பனத்தில் தேவன் அவனிடம் உண்மையைச் சொல்லும் வரை, யோசேப்பினுடைய வருங்கால மனைவியின்  நம்பகத்தன்மையை அவனுக்கு  கேள்விக்குள்ளாக்கியது. இறுதியாக நடந்தது என்னவென்றால், இயேசு ஒரு உண்மையான மனித குழந்தையாக பிறந்தார்.

இயேசு முழுமையாகவும் பூரணமாகவும் மனிதன் ஆவார். கிறிஸ்து அற்புதமான விதத்தில் கன்னியின் வயிற்றில் கருத்தரித்தது அவருடைய உண்மையான மனிதத்தன்மையை எந்த வகையிலும் குறைக்காது. இயேசு அற்புதமான விதத்தில் கன்னியின் வயிற்றில் கருத்தரித்ததன் மூலம் உண்மையில் நமக்கு மனிதத்தன்மையைக் காட்டுகிறார், ஏனென்றால் பாவமில்லாமல் நாம் முழுமையான மனிதர்களாக இருக்க முடியும் என்பதை கிறிஸ்துவில் காண்கிறோம், அப்படித்தான் நாம் பரலோகத்திலும் இருப்போம்.

Dr. கே. எரிக் தோனேஸ்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயேசுவின் தோற்றத்தைப் பற்றி பார்த்தோம், அவருடைய சரீரம் அவருடைய முழு மனிதத்தன்மையையும் எவ்வாறு உறுதிப்படுத்துகிறது என்பதை விவாதிக்க நாம் தயாராக உள்ளோம்.

## சரீரம்

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின்* கூற்றை இங்கே நாம் நினைவில் வைத்திருக்கிறோம்:

> இயேசு பொந்தியு பிலாத்துவின் கீழ் பாடு அனுபவித்து,
> சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, அடக்கம் செய்யப்பட்டார்;

இந்த வார்த்தைகளில், விசுவாச அறிக்கையானது சில அனுபவங்கள் இயேசுவிடம் இருந்ததாக கூறுகிறது, அவர் உண்மையிலேயே ஒரு சரீரமுள்ள மனிதராக இருந்திருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

மத்தேயு 27, மாற்கு 15, லூக்கா 23, மற்றும் யோவான் 18–19 ஆகிய வேத பகுதிகளில் இயேசு கைது செய்யப்பட்ட மற்றும் சிலுவையில் அறையப்பட்ட விவரங்களின்படி, பொந்தியு பிலாத்துவின் கீழ் இயேசு பல்வேறு வழிகளில் பாடு பட்டார். அவர் அடித்து நொறுக்கப்பட்டார், முட்களால் ஆன கிரீடம் அணிய கட்டாயப்படுத்தப் பட்டார், துப்பப்பட்டு, கேலி செய்யப்பட்டு, ஒரு கோலால் தலையில் பலமுறை தாக்கப்பட்டார், மற்றும் மரணதண்டனை அடைவதற்கு செல்லும் வழியில் தனது சொந்த சிலுவையை சுமந்து செல்ல கட்டாயப்படுத்தப்பட்டார்.

இயேசுவின் பாடுகள், சிலுவையில் அறையப்படுதல், மரணம் மற்றும் அடக்கம் ஆகியவை அவர் ஒரு உண்மையான மனித சரீரத்துடன் இருந்த ஒரு உண்மையான மனிதர் என்பதை நிரூபித்தன - ஒன்று அடிக்கப்படக்கூடியவராகவும், இரத்தம் சிந்தக்கூடியவராகவும், போர்ச்சேவகரால் துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடிய ஒருவராகவும், சோர்வின் மூலம் கீழே சரிந்து விழுந்து சாகக் கூடியவராகவும், மற்றும் அவரது ஆத்துமா அவரை விட்டு வெளியேறியபோது ஒரு கல்லறையில் அடக்கம் செய்யப்படக் கூடியவராகவும் இருந்தார்.

ஒரு உண்மையான மனித சரீரத்தைக் கொண்டிருப்பது மிகவும் முக்கியமானது, ஏனென்றால் தேவனுடைய நீதியின் படி ஒரு உண்மையான மனிதன் மனிதகுலத்தின் பாவங்களுக்கு பரிகாரம் செய்ய சரீரப் பிரகாரமாக தேவனின் நியாயத்தீர்ப்பை அனுபவிக்க வேண்டும். ரோமர் 7:4, கொலோசெயர் 1:21-22, மற்றும் எபிரெயர் 10:10 போன்ற இடங்களில் இந்த முக்கியத்துவத்தைக் காண்கிறோம்.

ஒரு உதாரணத்திற்கு, எபிரெயர் 2:14-17 இல் உள்ள வார்த்தைகளை கவனிக்கவும்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார், தன் மரணத்தினாலே ஜனங்களின் பாவங்களுக்கு பரிகாரம் செய்வதற்கு … அவர் அப்படியானார் (எபிரெயர் 2:14-17).

இந்த வேத பகுதி தெளிவுபடுத்துவது போல, நமக்கு பரிகாரம் செய்வதற்கு இயேசு மாம்சமாகவும் இரத்தமாகவும் இருக்க வேண்டும். மேலும் அவர் ஒரு சரீரமுள்ள மனிதனாகவும் இருக்க வேண்டும்.

இயேசுவின் தோற்றம் மற்றும் சரீரத்தைப் பற்றிய இந்த புரிதலுடன், இயேசுவின் ஆத்துமா அவருடைய மனிதத்தன்மையை நிறைவு செய்தது என்ற உண்மையைப் பார்ப்போம்.

## ஆத்துமா

மனிதர்கள் ஒரு அழியாத ஆத்துமாவையும் ஒரு மரணமடையக்கூடிய சரீரத்தைக் கொண்டிருப்பதாக வேதம் தொடர்ந்து கூறுகிறது. இது நம் ஆத்துமாக்களைக் குறிக்க பலவிதமான பதங்களை உபயோகிக்கிறது, ஆனால் “ஆத்துமா” மற்றும் “ஆவி” போன்றவைகள் தான் பொதுவான பதங்கள். எபிரெயர் 4:12 மற்றும் 1 தெசலோனிக்கேயர் 5:23 ஆகியவற்றின் அடிப்படையில், சில பாரம்பரியங்கள் “ஆத்துமா” மற்றும் “ஆவி” ஆகியவை நம்முடைய வெவ்வேறு பகுதிகள் என்று கூறுகின்றன. ஆனால் ஏறக்குறைய 200 வசனங்கள் உள்ளன, அவற்றில் ஆத்துமா அல்லது ஆவி என்கிற பதங்கள் ஒட்டுமொத்தமாக நம்முடைய அனைத்து உள், சரீரம் அல்லாத அம்சங்களையும் குறிக்கப் பயன்படுகிறது. ஆகவே, “ஆத்துமா” மற்றும் “ஆவி” ஆகிய பதங்கள் மனிதன் சரீரம் மற்றும் ஆத்துமா ஆகிய இரண்டு முக்கிய பகுதிகளை மட்டுமே கொண்டிருக்கின்றான் என்ற ஒரே அடிப்படை யதார்த்தத்தைக் குறிக்கின்றன என்று முடிவு செய்வது சிறந்தது.

லூக்கா 23:46 இல், இயேசு மரித்துக் கொண்டிருக்கும்போது தன் சொந்த “ஆத்துமா” அல்லது “ஆவியைப்” பற்றி பேசினார். அவருடைய வார்த்தையை கவனியுங்கள்:

> பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் (லூக்கா 23:46).

இயேசு சிலுவையில் மரித்தபோது, அவருடைய சரீரம் கல்லறையில் வைக்கப்படும் போது, அவருடைய மனித ஆவி அல்லது ஆத்துமா பிதாவாகிய தேவனின் கரங்களில் இருக்கும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

நம்முடைய ஆவிக்குரிய பகுதியாக, நம் ஆத்துமா நம் மனசாட்சியின் இருக்கையாக இருக்கிறது. நம் சரீரங்கள் மரிக்கும் போது, நம் ஆத்துமாக்கள் நம் சரீரத்திலிருந்து பிரிக்கப்பட்டு ஒரு உணர்வுள்ள நிலையில் தொடர்கின்றன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயேசு மரித்தபோதும் இதேதான் நடந்தது என்று *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* விளக்குகிறது. குறிப்பாக, இது இவ்வாறு கூறுகிறது:

> அவர் பாதாளத்தில் இறங்கினார்.

இயேசு மரித்தபோது, அவருடைய உணர்வுள்ள, பகுத்தறியும் ஆத்துமா அவரது சரீரத்தில் இருந்து பிரிக்கப்பட்டது. அவரது சரீரம் கல்லறையில் இருந்தபோது, அவரது ஆத்துமா பாதாளத்தில் இறங்கியது. பின்னர் இந்தப் பாடத்தில் இந்த வரியின் அர்த்தத்தை இன்னும் ஆழமாக ஆராய்வோம். ஆனால் இப்போதைக்கு, இயேசு பாதாளத்தில் இறங்குவதைக் குறிப்பிடுவதன் மூலம், இயேசுவுக்கு ஒரு உண்மையான மனித ஆத்துமா இருப்பதாக *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* உறுதிப்படுத்துகிறதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இறுதியாக, இயேசுவின் மனிதத்தன்மையை அவரது தோற்றம், சரீரம் மற்றும் ஆத்துமா பற்றிய குறிப்புகள் மூலம் உறுதிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* இயேசுவின் ஆத்துமா மீண்டும் அவரது சரீரத்துடன் இணைந்ததான உயிர்த்தெழுதலைப் பற்றியும் பேசுகிறது.

## உயிர்த்தெழுதல்

இயேசு ஒரு உண்மையான மனிதர் என்பதை உயிர்த்தெழுதல் நிரூபிக்கிறது, ஏனென்றால் அவருடைய முழுமையான, மகிமைப்படுத்தப்பட்ட மனித இருப்பு அவரது உண்மையான மனித சரீரத்தை தனது உண்மையான மனித ஆத்துமாவுடன் மீண்டும் இணைப்பதை உள்ளடக்கியது என்பதை இது மீண்டும் உறுதிப்படுத்துகிறது. அவரது மனித ஆத்துமா அவரது பரிபூரண மனித சரீரத்திற்குள் புகுத்தப்பட்டபோது அவரது சரீரத்தின் உயிர்த்தெழுதல் நடைபெற்றது. அவருடைய உயிர்த்தெழுந்த சரீரம் சில வழிகளில் வித்தியாசமாக இருந்தது, ஏனெனில் அது மகிமைப்படுத்தப்பட்டது, இனி அதற்கு மரணமில்லை. ஆனால் இது அவரை  குறைவான சரீரம் உடையவராகவோ அல்லது குறைவான மனிதனாகவோ மாற்றவில்லை. மாறாக, 1 கொரிந்தியர் 15 முழுவதும் நாம் காண்கிறபடி, இயேசுவின் உயிர்த்தெழுந்த சரீரம் எல்லா விசுவாசிகளின் சரீர உயிர்த்தெழுதலின் முதல் பலனாகும். இதுபோல, எதிர்காலத்தில் நம்முடைய சரீரங்கள் எப்படி இருக்கும் என்பதை இது காட்டுகிறது.

1 கொரிந்தியர் 15:20-23 இல் பவுல் எழுதியதைக் கவனியுங்கள்:

> கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று… அவனவன் தன்தன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான்: முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (1 கொரிந்தியர் 15:20-23).

ஆதாம் முதல் மனிதனாக சிருஷ்டிக்கப்பட்டதைப் போலவே, மகிமைப்படுத்தப்பட்ட சரீரத்துடன் உயிர்த்தெழுந்த முதல் மனிதர் இயேசு ஆவார். அவருக்கு முன் இருந்த மற்றவர்கள் மீண்டும் உயிரோடு எழுப்பப்பட்டனர், அவர்களில் சிலர் இயேசுவால் உயிரோடு எழுப்பப்பட்டனர். ஏனோக்கும் எலியாவும் கூட மரிக்காமல் சரீரத்தோடு பரலோகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். ஆனால் இவர்களில் எவரும் மகிமைப்படுத்தப்பட்ட, அழியாத சரீரங்களைப் பெறவில்லை.

ஆனால் இயேசுவின் சரீரம் இப்போது மகிமைப்படுத்தப்பட்டிருந்தாலும், அது இன்னும் முழு மனித சரீரமாகவே இருக்கிறது – மகா உயிர்த்தெழுதலில் மரித்தவர்கள் உயிர்த்தெழும்போது தேவன் நம் சரீரங்களைப் புதுப்பித்தபின்னும் நாம் முழு மனிதத்தன்மையுடையவர்களாகவே இருப்போம்.

> அவர் ஒரு குழந்தையாக இருந்தார். அவர் குழந்தை பருவத்தில் தனது தாயை முற்றிலும் சார்ந்து இருந்தார். அவர் வளர்ந்தார் – அவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும் மனுஷர் தயவிலும் விருத்தியடைந்தார் என்று லூக்கா சொல்கிறார். நாம் அனுபவிக்கும் அதே பசியையும், நாம் அனுபவிக்கும் அதே தாகத்தையும் அவர் அனுபவித்ததாகக் கூறப்படுகிறது, மேலும் கல்வாரி சிலுவையில் அவர் ஒரு மனிதன் மரணத்தை அனுபவிப்பது போல மரணத்தை அனுபவித்தார் என்று கூறப்படுகிறது. இப்போது, அது மிக அதிகமாக இருந்தது. அவர் முழு மனிதராக மட்டுமல்ல, முழு தேவனாகவும் இருந்தார், ஆனால் உண்மை என்னவென்றால், இயேசு உண்மையான மனிதர் மட்டுமல்ல; பரிபூரண மனிதரும் கூட.
>
> Dr. ஆர். ஆல்பர்ட் மோஹ்லர், Jr.

இப்போது நாம் அவருடைய அனுபவங்களின் அடிப்படையில் இயேசுவின் மனிதத்தன்மையைப் பார்த்திருக்கிறோம், *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* குறிப்பிடப்பட்டுள்ள அவருடைய மனித அலுவலுக்கு, அதாவது கிறிஸ்துவின் அலுவலுக்கு நம் கவனத்தைத் திருப்புவோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# அலுவல்

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையிலிருந்து* இந்த வார்த்தைகளில் இயேசுவின் அலுவல் குறிப்பிடப்பட்டுள்ளது:

> நான் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன்.

நவீன கிறிஸ்தவத்தில், ”கிறிஸ்து” என்ற வார்த்தை உண்மையில் அவருடைய தனிப்பட்ட பெயரின் ஒரு பகுதியல்ல. இயேசுவின் அலுவலுக்கு தரப்பட்ட பட்டம் என்பது பல விசுவாசிகளுக்குத் தெரியாது. இப்படிப் பார்த்தால், “கிறிஸ்து” என்ற வார்த்தை “ராஜா” அல்லது “நியாயாதிபதி” போன்ற வார்த்தைகளுக்கு மிகவும் ஒத்திருக்கிறது.

இயேசுவின் மனித அலுவலைப் பற்றி இரண்டு பகுதிகளாகப் பேசுவோம். முதலாவது, “கிறிஸ்து” என்று அழைக்கப்படும் அலுவலைக் குறித்த பழைய ஏற்பாட்டு பின்னணியைக் குறித்து ஆய்வு செய்வோம். இரண்டாவதாக, இயேசுவில் நிறைவேறுகிற இந்த அலுவல் கர்த்தருடைய மனிதத்தன்மையை எவ்வாறு சுட்டிக்காட்டுகிறது என்பதை விளக்குவோம். முதலாவது, “கிறிஸ்து” என்று அழைக்கப்படும் அலுவலைக் குறித்த பழைய ஏற்பாட்டு பின்னணியிலிருந்து தொடங்குவோம்.

## பழைய ஏற்பாட்டுப் பின்னணி

“கிறிஸ்து” என்ற ஆங்கில வார்த்தை *கிறிஸ்டோஸ்* என்கிற கிரேக்க வார்த்தையின் மொழிப்பெயர்ப்பாகும், இது பழைய ஏற்பாட்டின் எபிரெய வார்த்தையான *மாஷியா* அல்லது “மேசியா” என்பதன் மொழிப்பெயர்ப்பாகும், அதாவது “அபிஷேகம் செய்யப்பட்டவர்” என்பது இதன் அர்த்தம் ஆகும்.

பழைய ஏற்பாட்டின் நாட்களில், ”அபிஷேகம் செய்யப்பட்டவர்” என்ற வார்த்தை ஒரு பரந்த பதமாகும், இந்தப் பதம் ஒரு விசேஷித்த திறனுடன் அவருக்கு சேவை செய்ய தேவன் நியமித்த எவரைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்படலாம். உதாரணமாக, 1 நாளாகமம் 16:22 தீர்க்கதரிசிகளை அபிஷேகம் செய்யப்பட்டவர்களாக அடையாளப்படுத்துகிறது. லேவியராகமம் 4:3, 5, 16 அபிஷேகம் செய்யப்பட்ட ஆசாரியர்களைப் பற்றி பேசுகிறது. 1 சாமுவேல் 26:9, 11, 16 இல், தாவீது சவுலை கர்த்தரால் அபிஷேகம் செய்யப்பட்டவர் என்று குறிப்பிட்டார், ஏனென்றால் அவர் இஸ்ரவேலின் இராஜாவாக இருந்தார்.

பிரதான ஆசாரியரின் அபிஷேகத்தை லேவியராகமம் 21:10-12 விவரிக்கும் விதத்தைக் கவனியுங்கள்:

> தன் சகோதரருக்குள்ளே பிரதான ஆசாரியனாகத் தன் சிரசில் அபிஷேகதைலம் வார்க்கப்பட்டவனும், அவனுக்குரிய வஸ்திரங்களைத் தரிக்கும்படி பிரதிஷ்டைபண்ணப்பட்டவனுமாயிருக்கிறவன் எவனோ ...



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அவனுடைய தேவனின் அபிஷேகதைலம் என்னும் கிரீடம் அவன்மேல் இருக்கிறதே (லேவியராகமம் 21:10-12).

நாம் இங்கே பார்ப்பது போல், அபிஷேக சடங்கானது ஜனங்களை தேவனின் சேவைக்கு அர்ப்பணித்தது.

பழைய ஏற்பாட்டில் "அபிஷேகம் செய்யப்பட்டவர்" என்ற பதத்தின் மிக முக்கியமான பயன்பாடுகளில் ஒன்று, இஸ்ரவேல் மற்றும் யூதா மீது ராஜாக்களாக இருந்த தாவீதின் சந்ததியினருக்குப் பொருந்தியது. சங்கீதம் 89:38, 51, சங்கீதம் 132:10, 17, 2 நாளாகமம் 6:42 போன்ற இடங்களில் இதைக் காண்கிறோம். தாவீதின் வாழ்நாளில், தேவன் தாவீதுடன் ஒரு உடன்படிக்கை செய்தார், தாவீதின் சந்ததியினரில் ஒருவரின் ராஜ்யத்தின் கீழ் பூமியில் ஒரு தோல்வியுறாத ராஜ்யத்தை நிறுவுவதாக வாக்குத்தத்தம் செய்தார். **சங்கீதம் 89:3-4 தாவீதுடனான கர்த்தருடைய உடன்படிக்கையை இந்த வழியில் சுருக்கமாகக் கூறுகிறது:**

> என்னால் தெரிந்துகொள்ளப்பட்டவனோடே
> உடன்படிக்கைபண்ணி, என் தாசனாகிய தாவீதை நோக்கி:
> "என்றென்றைக்கும் உன் சந்ததியை நிலைப்படுத்தி,
> தலைமுறை தலைமுறையாக உன் சிங்காசனத்தை
> ஸ்தாபிப்பேன் என்று ஆணையிட்டேன்." (சங்கீதம் 89:3-4).

தேவன் அவர்களுக்கு வாக்குத்தத்தம் அளித்திருந்தார் என்றால், தாவீதின் புத்திரர் சிங்காசனத்தின் கட்டுப்பாட்டை ஏன் இழந்தார்கள் என்று ஆச்சரியப்படுவது இயல்பானது தான். இந்த உடன்படிக்கையில் தேவன் வாக்குத்தத்தம் செய்த ஆசீர்வாதங்கள் தாவீதின் ஒவ்வொரு சந்ததியினரின் கீழ்ப்படிதலின் அடிப்படையில் அமைக்கப்பட்டன என்பது தான் பதில் ஆகும். இந்த நிபந்தனை 2 நாளாகமம் 6:16, சங்கீதம் 89:30-32, மற்றும் சங்கீதம் 132:12 ஆகியவற்றில் வெளிப்படையாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, தாவீதின் சந்ததியினர் கர்த்தருக்கு விரோதமாக கலகம் செய்த போது, அவர்கள் சிங்காசனங்களை இழந்தார்கள்.

உதாரணமாக, கி. மு. 922 இல், தாவீதின் பேரன் ரெகொபெயாமின் நாட்களில், பத்து கோத்திரங்கள் தாவீதின் வம்சத்திலிருந்து பறிக்கப்பட்டு யெரொபெயாமுக்குக் கொடுக்கப்பட்டன. இந்த நிகழ்வைப் பற்றி 1 இராஜாக்கள் 11–12 இல் வாசிக்கிறோம். யெரொபெயாமைப் பின்தொடர்ந்த கோத்திரங்கள் இஸ்ரவேல் ராஜ்யம் ஆயினர், ரெகொபெயாமைத் தொடர்ந்து வந்தவர்கள் யூதா ராஜ்யம் ஆயினர்.

பின்னர், கி. மு. 587 இல், யூதாவின் ராஜ்யம் கூட தாவீதின் வீட்டிலிருந்து அகற்றப்பட்டது, அவருடைய சந்ததியான எகொனியா பதவி நீக்கம் செய்யப்பட்டார், அவருடைய ராஜ்யம் முற்றிலுமாக பாபிலோனியர்களிடம் விழுந்தது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த காலகட்டத்தில், பல தீர்க்கதரிசிகள் எதிர்காலத்தில் தேவன் ஒரு மகா ”மேசியா” அல்லது ”அபிஷேகம் செய்யப்பட்டவரை” அனுப்புவார் என்று முன்னறிவித்தனர். தாவீதின் சந்ததியிலிருந்து வரும் அவர் ஒரு பெரிய ராஜாவாக இருப்பார், அவர் இஸ்ரவேல் மற்றும் யூதாவின் ராஜ்யங்களை மீட்டெடுத்து மீண்டும் ஒன்றிணைப்பார்.

> பழைய ஏற்பாட்டில், மேசியா என்று அறியப்பட்ட ராஜா – தாவீதின் சந்ததியிலிருந்து வந்தவர். தாவீதோடு தேவன் ஒரு உடன்படிக்கை செய்தார், அந்த உடன்படிக்கையில் ஒரு நாள் தேவன் ஒரு ராஜாவை எழுப்புவார் என்று வாக்குத்தத்தம் செய்யப்பட்டது, அவர் ஒரு விசேஷித்த, தனித்துவமான “தேவ குமாரன்” என்கிற உறவைக் கொண்டிருப்பார் – அவருடைய குமாரனாக, நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டி என்றென்றும் தாவீதின் சிங்காசனத்தில் ஆட்சி செய்வார். எனவே உண்மையில், பழைய ஏற்பாட்டு மேசியாவைக் குறிப்பிடும்போது, நாம் ஒரு இறுதியான ராஜாவைப் பற்றி பேசுகிறோம் – அவர் தேவனின் இரட்சிப்பையும் விடுதலையையும் கொண்டுவருவார்.
>
> Dr. மார்க் எல். ஸ்ட்ராஸ்

அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரிக்க வைத்து, மீட்கப்பட்ட தேசத்திற்கு தேவனுடைய மிகப்பெரிய ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும் தாவீதின் சந்ததி என்று பல பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மேசியா அல்லது கிறிஸ்துவைப் பற்றி பேசினார்கள். உதாரணமாக, எரேமியா 23:5-8, 30:8-9, மற்றும் 33:14-17 ஆகியவற்றில் இந்த வகையான தீர்க்கதரிசனங்களைக் காண்கிறோம். எசேக்கியேல் 34:20-31, மற்றும் 37:21-28 ஆகியவற்றில் அவற்றைக் காண்கிறோம். சகரியா 12–13 இல் அவற்றைப் வாசிக்கிறோம். **ஒரு உதாரணமாக, எரேமியா 23:5-6 யைக் கவனிக்கவும்:**

> ”இதோ, நாட்கள் வரும்” என்று கர்த்தர் சொல்லுகிறார், ”அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார். அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரவேல் சுகமாய் வாசம்பண்ணும்” (எரேமியா 23:5-6).

இதுபோன்ற தீர்க்கதரிசனங்களின் மூலம், பழைய ஏற்பாடு தேவ ஜனங்களை மேசியாவின் வருகையை எதிர்நோக்க வைத்தது – தாவீதின் வம்சத்தில் அபிஷேகம் செய்யப்பட்ட ஒரு ராஜாவாகிய அவர் அவர்களை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

துன்பத்திலிருந்து மீட்டு தேவனுடைய மகிமையான ஆசீர்வாதங்களை அனுபவிக்கச் செய்வார்.

மேசியாவின் அலுவல் குறித்த பழைய ஏற்பாட்டின் பின்னணியைப் பற்றிய இந்த புரிதலை மனதில் கொண்டு, இயேசுவினுடைய இந்த அலுவலின் நிறைவேறுதல் அவருடைய மனிதத்தன்மையை எவ்வாறு சுட்டிக்காட்டுகிறது என்பதை ஆராய்ந்து பார்க்க நாம் தயாராக உள்ளோம்.

## இயேசுவில் நிறைவேறுதல்

புதிய ஏற்பாடு 500 க்கும் மேற்பட்ட இடங்களில் இயேசுவை கிறிஸ்து என்று கூறுகிறது. ஆகவே, ஒரு கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, பழைய ஏற்பாடு எதிர்பார்த்த மகா மேசியா அவர் தான் என்பது தெளிவாகிறது. ஆனால் எல்லா சந்தேகங்களையும் நீக்க, யோவான் சுவிசேஷத்தில் இயேசு “மேசியா” என்று அழைக்கப்படும் இரண்டு வேத பகுதிகளைப் பார்க்க வேண்டும், மேலும் “மேசியா” என்பதற்கு “கிறிஸ்து” என்று அர்த்தம் என யோவான் விளக்குகிறார். இந்த வேத பகுதிகள் யோவான் 1:41, யோவான் 4:25-26 ஆகியவைகளாகும். இந்த காரியத்தை நிரூபிக்க இவற்றில் ஒன்றைப் பார்ப்போம்.

யோவான் 4:25-26 இல் கிணற்றின் அருகில் இருந்த ஸ்திரீயுடன் இயேசு உரையாடியதிலிருந்து இந்த வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> அந்த ஸ்திரீ அவரை நோக்கி, (கிறிஸ்து என்னப்படுகிற) ”மேசியா வருகிறார் என்று அறிவேன்”, ”அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார்” என்றாள். அதற்கு இயேசு, ”உன்னுடனே பேசுகிற நானே அவர்” என்றார் (யோவான் 4:25-26) .

பழைய ஏற்பாட்டால் தீர்க்கதரிசனமாக கூறப்பட்ட மேசியா தாம் தான் என்று இங்கே இயேசு வெளிப்படையாக ஒப்புக்கொண்டார். கிரேக்க மொழியில் “மேசியா” என்பதற்கான சாதாரண வார்த்தை *கிறிஸ்டோஸ்* என்று யோவான் விளக்கினார், இங்கே “கிறிஸ்து” என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. இயேசு ”கிறிஸ்து” என்று குறிப்பிடப்படுவதை நாம் காணும்போதெல்லாம், பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக கூறப்பட்ட மேசியா என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று இது நமக்கு சொல்கிறது.

ஆனால் மேசியா அல்லது கிறிஸ்துவாக இயேசுவின் பாத்திரம் அவர் உண்மையிலேயே மனிதர் என்பதை எவ்வாறு நிரூபிக்கிறது? தேவனால் ஏன் தனது தெய்வீக மகிமையில் பூமிக்கு வந்து தனது ஜனங்களை இரட்சிக்க முடியவில்லை? அல்லது அவர் விரும்பிய தேசத்தை வழிநடத்த ஒரு தேவதூதனை ஏன் அவரால் அனுப்ப முடியவில்லை?

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களின்படி, மேசியா மனிதனாக இருக்க வேண்டியிருந்தது, ஏனெனில் அவர் தாவீதின் குமாரனாக இருக்க



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேண்டியிருந்தது. நாம் பார்த்தபடி, அவருடைய சந்ததியினரில் ஒருவர் இஸ்ரவேலை என்றென்றுமாக ஆட்சி செய்வார் என்று குறிப்பிட்டு தேவன் தாவீதுடன் ஒரு உடன்படிக்கை செய்திருந்தார். நிச்சயமாக, தாவீதின் சந்ததியினர் அனைவரும் மனிதர்களே.

> தேவன் உடன்படிக்கையின் மூலம் பாவிகளுடன் உறவுகளை உருவாக்குகிறார். அவர் அதை தானாகவே முன்வந்து செய்கிறார். அவர் அவ்வாறு செய்ய வேண்டும் என்பது அவருடைய கடமை அல்ல. அவரே அதற்கு முன்முயற்சி எடுத்தார். தனது சொந்த குமாரனின் மத்தியஸ்தத்தின் மூலம் நம்முடன் உடன்படிக்கை செய்வது தேவனின் சர்வாதிகாரத்துவ தெரிந்தெடுப்பாகும். தேவன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தியவுடன், அதன் விதிமுறைகள் ஆசீர்வாதத்திற்காகவோ அல்லது சபித்தலுக்காகவோ இருந்தாலும், அந்த உடன்படிக்கையின் விதிமுறைகளை நிறைவேற்ற அவர் கடமைப்பட்டிருக்கிறார். அந்த உடன்படிக்கையை மீறுவதற்கு அவருக்கு சுதந்திரம் இல்லை.
>
> Dr. டெரெக் தாமஸ்

> தேவன் தனது ஆணையின்படி, உண்மையில் தானாகவே கடமைப்பட்டுக் கொண்டார் என்பது ஆச்சரியமாகத் தோன்றுகிறது. அவர் ஒரு உடன்படிக்கை செய்யும்போதெல்லாம், அதன் விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார். தனது உடன்படிக்கையின் ஜனங்களுக்கு தனது நித்திய சித்தத்தை நிறைவேற்றுவதற்கான ஒரு கருவியாக இந்த வழியில் தன்னை கடமைப்படுத்திக்கொள்கிறார். ஆனால் உடன்படிக்கை அவரைப் பிணைத்தாலும், அது அவருடைய சுதந்திரமான சித்தத்தின் வெளிப்பாடாக இருக்கிறது.
>
> Dr. பவுல் சாங், மொழிப்பெயர்ப்பு

தாவீதுடனான உடன்படிக்கையை நிறைவேற்றும் விதத்தில், தம் ஜனங்களை இரட்சிக்க ஒரு மனிதனாகிய மேசியாவை அனுப்ப தேவன் கடமைப்பட்டார். அந்த மேசியா தான் இயேசு.

தாவீதின் ஒரு மனித குமாரன் மட்டுமே தன் ஜனங்களுக்குப் பரிகார பலியாக இருக்க முடியும் என்பது இரண்டாவது காரணமாகும். நாம் பார்த்தபடி, மேசியா மனிதனாக இருக்க வேண்டும் என்பதை எபிரெயர் 2:14-17 கூறுகிறது. இதற்கும் அப்பால், தாவீதின் மனித குமாரனால் பரிகாரம் செய்யப்பட வேண்டும்

என்பதை ஏசாயா 53 அவசியப்படுத்துகிறது. அவர் இரண்டாவது ஆதாமாக இருக்க வேண்டும் என்பது தான் மேசியா மனிதனாக இருக்க வேண்டிய மூன்றாவது காரணம் ஆகும். அதாவது, ஆதாம் தோல்வியுற்ற இடத்தில் அவர் வெற்றி பெற வேண்டியிருந்தது.

தேவன் மனிதகுலத்தை சிருஷ்டித்தபோது, ஆதாமை முழு இனத்தின் தலைவராக நியமித்தார், மேலும் உலகத்தை தேவனுடைய ராஜ்யமாக மாற்ற மனிதகுலத்தை நியமித்தார். ஆனால் ஆதாம் பாவம் செய்தான், மனிதகுலத்தை பாவத்தில் மூழ்கடித்து, நமக்கு நியமிக்கப்பட்ட பணியைச் செய்ய நம்மால் செய்ய முடியாதபடி ஆக்கினான். ஆதியாகமம் 1–3 இந்த கதையை பதிவு செய்கிறது, ரோமர் 5:12-19 அதன் ஆழமான முக்கியத்துவத்தை விளக்குகிறது. வீழ்ச்சியடைந்த மனிதகுலம் பல நூற்றாண்டுகளாக தேவனுடைய ராஜ்யத்தை கட்டியெழுப்ப தொடர்ந்து முயன்று தோல்வியுற்றது என்பதை பழைய ஏற்பாட்டு வரலாற்று புத்தகங்கள் பதிவு செய்கின்றன.

இன்னும், பிதாவுக்கு நம்மைக் குறித்த எதிர்பார்ப்புகள் மாறவில்லை – தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்ப மனிதர்களுக்கு இன்னும் பொறுப்பு உள்ளது. ஆகவே இறுதியில் பிரச்சனையை சரிசெய்ய பிதா தனது சொந்த குமாரனை அனுப்பினார். குமாரன் நமக்காக ராஜ்யத்தைக் கட்ட வந்தார். ஆனால் அதை நம் சார்பாக கட்டியெழுப்பவும் – நம் இடத்தில் அவர் இருப்பதற்கும் – அவர் மனிதனாக இருக்க வேண்டும். அவருடைய நீதியுள்ள வாழ்க்கை, மரண பரிகாரம், உயிர்த்தெழுதல் மற்றும் பரலோக சிங்காசனத்தில் அமருதல் ஆகியவற்றின் மூலம் ஆதாமும் நாமும் தோல்வியுற்ற இடத்தில் இயேசு வெற்றி பெற்றார். அவர் மனிதகுலத்தின் இரண்டாவது ஆதாம் ஆனார். விசுவாசத்தினால் நாம் இயேசுவோடு ஐக்கியப்படும்போது, அவருடைய வெற்றி நம்முடைய வெற்றியாகிறது, அவருடைய அதிகாரம் நம்முடைய அதிகாரமாகிறது. தேவனுடைய ராஜ்யத்தை கட்டியெழுப்புவதில் கண்ணியமான, முக்கிய பங்கு நமக்கிருக்கிறது.

இயேசுவின் மனிதத்தன்மை பற்றிய நம் விவாதத்தில் இதுவரை, அவருடைய பல்வேறு மனித அனுபவங்களைப் பற்றியும், மேசியா அல்லது கிறிஸ்துவின் மனித அலுவல் பற்றியும் பேசியுள்ளோம். இந்த கட்டத்தில், இயேசுவின் மனித இயல்பு பற்றியும் அவருடைய தெய்வீக இயல்புடனான அதன் உறவு பற்றியும் பேச நாம் தயாராக உள்ளோம்.

## இயல்பு

இயேசுவுக்கு ஒரு மனித இயல்பு இருக்கிறது என்று நாம் கூறும்போது, மனிதனாக இருப்பதற்கு அவசியமான அனைத்து பண்புகளையும் பண்புக்கூறுகளையும் அதாவது ஒரு மனித சரீரம் மற்றும் ஒரு பகுத்தறிவுள்ள மனித ஆத்துமா போன்றவைகளைக் கொண்டிருக்கிறார் என்பது இதன் அர்த்தம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சபை வரலாறு முழுவதும், கிறிஸ்துவின் மனிதத்தன்மையின் இயல்பு குறித்து பல இறையியல் போர்கள் நடத்தப்பட்டுள்ளன. அவர் எல்லா வகையிலும் முழு மனிதரா? அவர் சதை மற்றும் இரத்தம் கொண்ட சரீரத்தைக் கொண்டிருந்தாரா, அல்லது அவர் வெறுமனே மனிதராக தோன்ற மட்டும் செய்தாரா? அவருக்கு உண்மையான மனித ஆத்துமா இருந்ததா, அல்லது அவருடைய தெய்வீக நபர் வெற்று சரீரத்தில் வசித்தாரா? இது போன்ற கேள்விகள் தொழில்நுட்ப மற்றும் மர்மமான கேள்விகளாகத் தோன்றலாம், ஒருவேளை முக்கியமில்லாத கேள்விகள் போலவும் தோன்றலாம். ஆனால் சில நேரங்களில் கிறிஸ்துவின் மனித இயல்பு குறித்த வாதங்கள் சபையைப் பிளவு படுத்தும் அச்சுறுத்தலாக அமைந்திருக்கின்றன. அவை பல இறையியல் ஆலோசனை சங்கங்களில் பேசப்பட்ட காரியமாக இருந்திருக்கின்றன, மற்றும் ஏராளமான கள்ளப் போதனை பிரிவுகளுக்கு தடைக்கல்லாகவும் இருந்திருக்கின்றன. இன்றும் கிறிஸ்துவின் மனிதத்தன்மையைப் பற்றிய தவறான புரிதல்களால் சுவிசேஷமானது குறைவாக மதிப்பிடப்படுகிறது. எனவே, ஒவ்வொரு கிறிஸ்தவரும் இயேசுவினுடைய மனித இயல்பின் அடிப்படை அம்சங்களையாவது புரிந்துகொள்வது முக்கியம்.

உண்மையான கிறிஸ்தவ இறையியல் ஒவ்வொரு விஷயத்திலும் இயேசு முழு மனிதர் என்பதை தொடர்ந்து பேணி வருகிறது: அவருக்கு சரீரமும் ஆத்துமாவும் இருக்கிறது; அவர் நோய், காயம் மற்றும் மரணத்திற்கு உட்பட்டவராக இருந்தார்; அவருக்கு சாதாரண சரீர வரம்புகள் இருந்தன; மேலும் இதுபோல பலவற்றைச் சொல்லலாம்.

ஆனால் நாம் இயேசுவைப் பற்றி இப்படி பேசும்போது, விஷயம் விரைவாக சிக்கலாகிறது, ஏனென்றால் இயேசு மற்ற மனிதர்களிடமிருந்து சில முக்கியமான வழிகளில் வேறுபடுகிறார். ஒன்று, இயேசு ஒரு பரிபூரண மனிதர், அதேசமயம் நாமோ குறைபாடுடையவர்கள். இது நமக்கிடையே சில குறிப்பிடத்தக்க வேறுபாடுகளை ஏற்படுத்துகிறது. உதாரணமாக, ஒவ்வொரு மனிதனும் பாவம் செய்திருக்கிறான். இந்த கருத்தை 1 இராஜாக்கள் 8:46, சங்கீதம் 130:3, சங்கீதம் 143:2, ரோமர் 5:12, கலாத்தியர் 3:22 மற்றும் பல வேத பகுதிகளில் காண்கிறோம். ஒரே ஒரு உதாரணமாக, ரோமர் 3:10-12 இல் உள்ள வார்த்தைகளைப் கவனிக்கவும்:

> அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை, தேவனைத் தேடுகிறவன் இல்லை. எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை (ரோமர் 3:10-12).

ஆனால் இயேசு வித்தியாசமானவர். அவர் பாவம் இல்லாமல் பிறந்தார், மேலும் ஒரு பூரணமான பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்தார். எபிரெயர் 4:14-15, 9:14 போன்ற பகுதிகளில் அவருடைய பாவமற்ற தன்மையைப் பற்றி வேதம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

குறிப்பாகப் பேசுகிறது. ஆகவே, இயேசுவுக்கு உண்மையான மற்றும் முழுமையான மனித இயல்பு இருக்கிறது என்ற கூற்றுடன் இந்த கருத்தை எவ்வாறு ஒப்புரவாக்குவது? சரி, இதன் எளிமையான பதில் என்னவென்றால், பாவம் செய்வதோ பாவத்தை செய்யும் திறன் கொண்டிருப்பதோ மனிதனாக இருப்பதற்கான *தகுதியல்ல.*

ஆதியில் தேவன் பாவம் செய்யும் திறனுடன் மனிதகுலத்தை சிருஷ்டித்தார் என்பது உண்மைதான். ஆதாமும் ஏவாளும் ஆதியாகமம் 3 இல் நன்மை தீமை பற்றி அறியத்தக்க விருட்சத்திலிருந்து சாப்பிட்டபோது இதை நிரூபித்தனர். ஆனால் அவர்கள் பாவம் செய்வதற்கு முன்பே மனிதர்களாகவே இருந்தார்கள் என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். எனவே, பாவம் *செய்யாத* ஒரு மனிதனைப் பெறுவது சாத்தியமாகிறது. உண்மையில், நாம் மரித்து பரலோகத்திற்குச் செல்லும்போது, எபிரெயர் 12:23 போதிப்பது போல, பாவம் செய்கிற *திறனை* நாம் உண்மையில் இழப்போம். ஆனால் நாம் முழுமையாக மனிதர்களாகவே இருப்போம். எனவே, பாவத்தால் வீழ்ச்சியடைந்த இந்த உலகில் பாவம் நம் குணமாக இருக்கும், வரப்போகிற உலகில் அப்படி இருக்காது. எனவே, பாவம் என்பது மனிதகுலத்தின் இன்றியமையாத குணாதிசயம் அல்ல. இதனால்தான், இயேசுவின் மனித இயல்பு மனிதனாக இருப்பதற்கு *அவசியமான* அனைத்து பண்புகளையும் பண்புக்கூறுகளையும் உள்ளடக்கியது என்று நாம் கூறுகிறோம்.

இயேசுவை வித்தியாசப்படுத்தும் மற்றொரு விஷயம் என்னவென்றால், அவர் மனித இயல்பு மற்றும் தெய்வீக இயல்பு ஆகிய இரண்டு இயல்புகளைக் கொண்ட ஒரே நபர் ஆவார். அதாவது. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரே ஒரு இயல்பு மட்டுமே உள்ளது: அது மனித இயல்பு. ஆனால் இயேசு தேவனாகவும் மனிதனாகவும் இருக்கிறார், ஒரே நேரத்தில் முழுமையாக மனிதனாகவும் முழுமையாக தேவனாகவும் இருக்கிறார். கிறிஸ்துவின் இரண்டு இயல்புகளும் அவருடைய நபரில் எவ்வாறு ஒன்றுபடுகின்றன என்பதை வேதம் வெளிப்படையாகக் கூறவில்லை. இந்த ஒருங்கிணைப்பை விளக்குவதில் உள்ள சிரமங்கள் ஆரம்பகால சபையில் பல சர்ச்சைகளுக்கு வழிவகுத்தன. ஆனால் இறுதியில் சபை விவரங்களை விவரிப்பதில் வேதத்திற்கு அப்பால் செல்லாமல் கிறிஸ்துவின் ஒரு நபரையும் அவருடைய இரு இயல்புகளையும் உறுதிப்படுத்திய மொழியில் நிறுவியது.

கிறிஸ்துவில் உள்ள மனித இயல்பையும் தெய்வீக இயல்பையும் விவரிக்க நாம் பயன்படுத்தும் தொழில்நுட்ப சொல் “ஹைப்போஸ்டாடிக் யூனியன்” ஆகும். இது நமது நவீன காதுகளுக்கு ஒரு விசித்திரமான பதமாகத் தோன்றினாலும், ஆரம்பகால சபையில் இது எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதை நினைக்கும் போது அதைப் புரிந்து கொள்ளலாம். ஆரம்பகால சபையில், ”ஹைப்போஸ்டாஸிஸ்” என்பது ஒரு நபரைக் குறிக்க பொதுவாக பயன்படுத்தப்படும், குறிப்பாக திரித்துவத்திலுள்ள ஒரு நபரைக் குறிக்க பயன்படும் வார்த்தைகளில் ஒன்றாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உதாரணமாக, *பரிசுத்த ஆவியானவர் பற்றிய* தனது படைப்பின் 18 ஆம் அதிகாரத்தில், நான்காம் நூற்றாண்டின் சபை பிதா பேசில் ஹைப்போஸ்டாஸிஸ் என்ற வார்த்தையை பின்வரும் வழியில் பயன்படுத்தினார்:

> ஒரே தேவனும் பிதாவும் , ஒரேபேறானவரும், மற்றும் ஒரே பரிசுத்த ஆவியும் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஹைப்போஸ்டேஸசையும் தனித்தனியாக அறிவிக்கிறோம்.

இங்கே, ”ஒவ்வொரு நபரையும் நாம் தனித்தனியாக அறிவிக்கிறோம்” என்று சொன்னால், நாம் சரியான அர்த்தத்தைச் சொல்வோம் என்று பேசில் கூறினார். ஒரு தெய்வீக இயல்பும் ஒரு மனித இயல்பும் தேவ குமாரனாகிய நபருக்குள் ஹைப்போஸ்டாசிஸில் ஒருங்கிணைந்து இருப்பதே ஹைப்போஸ்டாடிக் ஐக்கியக் கோட்பாடாகும். அது பின்வருமாறு துல்லியமாக கூறுகிறது:

> இயேசு இரண்டு தனித்துவமான இயல்புகளைக் கொண்ட ஒரு நபர் (ஒரு தெய்வீக இயல்பு மற்றும் ஒரு மனித இயல்பு) ஆவார். ஒவ்வொரு இயல்பும் அதற்குரிய குணாதிசயங்களைக் கொண்டுள்ளது.

குமாரனாகிய தேவன் எப்போதுமே அதன் அனைத்து குணாதிசயங்களுடன் முழு தெய்வீகத்தன்மையைக் கொண்டிருக்கிறார். அவர் கருவில் உருவாக்கப்பட்டு ஒரு மனிதனாகப் பிறந்தபோது, ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய சரீரம் மற்றும் ஆத்துமா போன்ற அனைத்து அத்தியாவசிய குணாதிசயங்களையும் அவர் தன்னிடம் சேர்த்தார்.

புதிய ஏற்பாடு இயேசுவின் இரண்டு இயல்புகளையும்  ஒன்றிணைததுப் பேசும் ஒரு இடம் பிலிப்பியர் 2:5-7 ஆகும், அங்கு பவுல் இந்த வார்த்தைகளை எழுதினார்:

> கிறிஸ்து இயேசு … தேவனுடைய ரூபமாயிருந்தும் … தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் (பிலிப்பியர் 2:5-7).

இயேசு தேவனாக இருந்தார் மற்றும் முழு தெய்வீக இயல்பு கொண்டிருந்தார் என்பதை இங்கே பவுல் தெளிவுபடுத்தினார். பின்னர், அவர் மனித அவதாரம் எடுத்தார், அவரிடம் ஏற்கனவே இருந்த தெய்வீக இயல்புடன் ஒரு மனித இயல்பையும் சேர்த்தார். இயேசு “தன்னை ஒன்றுமில்லாமல் ஆக்கினார்” அல்லது இன்னும் “தன்னை வெறுமையாக்கிக் கொண்டார்” என்ற பவுலின் கூற்று சில சமயங்களில் கிறிஸ்தவர்களை குழப்பிவிட்டது.

இயேசு உண்மையில் அவருடைய மகிமையை அல்லது அவருடைய தெய்வீக இயல்பை கூட *ஒதுக்கி வைத்திருப்பதாக* சிலர் தவறாக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நினைத்திருக்கிறார்கள். ஆனால் முந்தைய பாடங்களில் நாம் பார்த்தபடி, இது சாத்தியமற்றது. தேவனுடைய இயல்பு மாறாதது. தேவன் எந்தவொரு அத்தியாவசிய குணாதிசயங்களையும் ஒதுக்கி வைக்க முடியாது, அவருடைய முழு இயல்பையும் ஒதுக்கி வைக்க முடியாது.

அதிர்ஷ்டவசமாக, பவுல் இந்த சொற்றொடரின் அர்த்தத்தை ஒரு அடிமையின் ரூபத்தை எடுத்துக்கொண்டார் மற்றும் மனுஷ சாயலானார் என்கிற இரண்டு பெயரெச்ச சொற்றொடர்களால் விளக்கி மிகத் தெளிவுபடுத்தினார். இந்த சொற்றொடர்கள் இயேசு ”ஒன்றுமில்லாதவராக” ஆனதும் ”தன்னை வெறுமையாக்கியதும்” எப்படி என்று சொல்கிறது. குறிப்பாக, இயேசு தன்னுடைய தெய்வீக இயல்பை *இழப்பதன்* மூலம் அல்ல, மாறாக ஒரு *கூடுதல்* இயல்பைப் பெறுவதன் மூலம் தன்னை வெறுமையாக்கினார் – இந்த மனித இயல்பு அவருடைய தெய்வீக இயல்புக்கு *பதிலான* ஒன்றாக இல்லாமல், அவருடைய தெய்வீக மகிமையை மட்டும் *மறைத்தது.*

இயேசுவின் இரண்டு இயல்புகளும் ஒன்றிணைந்திருப்பதை விளக்கும் மிகவும் பிரபலமான கூற்று,  வடக்கு ஆசியா மைனரில் உள்ள சால்செடன் நகரில் கி. பி. 451 இல் கூடிய பலதரப்பட்டவர்கள் அடங்கிய ஆலோசனை சங்கத்தின் விசுவாச அறிக்கையாகும். சால்செடன் ஆலோசனைச் சங்கம் கிறிஸ்துவாகிய நபர் மற்றும் அவருடைய இயல்புகளின் பாரம்பரிய கோட்பாடுகளைப் பாதுகாப்பதற்காகவும், இந்த விஷயங்கள் சம்பந்தப்பட்ட தவறான போதனைகளை மறுப்பதற்காகவும் கூடியது.

ஆலோசனைச் சங்கம் தயாரித்த அறிக்கை சால்செடோனியன் விசுவாச அறிக்கை அல்லது “சின்னம்” மற்றும் *சால்செடனின் வரையறை* உள்ளிட்ட பல பெயர்களால் அறியப்படுகிறது. அதிலிருந்து ஒரு சிறு பகுதியை கவனியுங்கள்:

> நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவத்துவத்தில் பரிபூரணராக [இருக்கிறார்], மனித இயல்பிலும் பரிபூரணராய் இருக்கிறார்; உண்மையிலேயே தேவனாகவும் உண்மையிலேயே மனிதராகவும் இருக்கிறார், ஒரு ஆத்துமாவும் சரீரமும் அவருக்கு இருக்கிறது … எல்லாவற்றிலும் நம்மைப் போன்றவராக இருக்கிறார், பாவமின்றி இருக்கிறார் … அசைக்கமுடியாத, மாறாத, பகுக்க முடியாத மற்றும் பிரிக்கமுடியாத இரண்டு இயல்புகளைக் கொண்டவர் என்று ஒப்புக்கொள்ள வேண்டும்; இயல்புகளின் தனித்தன்மை எந்த வகையிலும் அந்த இயல்புகளின் ஒருங்கிணைப்பால்  பறிக்கப்படுவதில்லை, மாறாக ஒவ்வொரு இயல்பின் உடைமைகளும் பாதுகாக்கப்பட்டு ஒரு நபர் மற்றும் ஒரு வாழ்வில் ஒத்துப்போகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

*சால்செடோனியன் விசுவாச அறிக்கையின்* பெரும்பகுதி மிகவும் தொழில்நுட்ப ரீதியில் கூறப்பட்டுள்ளது. ஆனால் நாம் அதை இரண்டு செய்திக்கூறுகளில் சுருக்கமாகக் கூறலாம். ஒருபுறம், இயேசு ஒரே ஒரு நபராக மட்டுமே இருக்கிறார். ஒரு மனித நபர் தனது சரீரத்தில் ஒரு தெய்வீக நபரை வரவழைத்ததைப் போல, அவருக்குள் இரண்டு நபர்கள் அல்லது இரண்டு மனதுகள் இல்லை. ஒரு தெய்வீக நபர் ஒரு மனித நபருடன் ஒன்றிணைந்தது போல, இரண்டு தனித்துவமான நபர்கள் அல்லது மனங்களின் கலவையாக அல்லது கலப்பினமாக இருக்கிற ஒரு நபர் அல்ல அவர். அவர் எப்போதும் தேவ குமாரன் என்று அழைக்கப்படும் அதே நித்திய மனிதராக இருக்கிறார்.

அதே நேரத்தில், இயேசுவுக்கு மனித இயல்பு மற்றும் தெய்வீக இயல்பு என இரண்டு தனித்துவமான இயல்புகள் உள்ளன. பிதாவின் இயல்பு முற்றிலும் தெய்வீகமானது போலவும், மனிதர்களின் இயல்பு முற்றிலும் மனிதத்தன்மையுடையதாகவும் இருப்பதைப் போல இந்த இரண்டு இயல்புகளும் முழுமையானவைகளாக இருக்கின்றன. தெய்வீகத்திற்கு அத்தியாவசியமான  ஒவ்வொரு குணாதிசயங்களையும் மனிதத்தன்மைக்கு அத்தியாவசியமான  ஒவ்வொரு குணாதிசயங்களையும் இயேசு வைத்திருக்கிறார்.

மேலும், இயேசுவின் இரண்டு இயல்புகளும் ஒன்றுக்கொன்று தனித்திருக்கின்றன. தெய்வீக மற்றும் மனித குணாதிசயங்களை இணைக்கும் கலப்பின இயல்பு அவருக்கு இல்லை. அவருடைய மனித குணாதிசயங்கள் அவரது தெய்வீக குணாதிசயங்களைத் தடுக்கவில்லை, அல்லது அவரது தெய்வீக குணாதிசயங்கள் அவரது மனித குணாதிசயங்களை மேம்படுத்தவுமில்லை. ஒவ்வொரு இயல்பும் முற்றிலும் மாறாமல் உள்ளது.

> தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான மத்தியஸ்தர், மகா பிரதான ஆசாரியராக, முழுக்க முழுக்க தேவனாகவும், முழு மனிதராகவும் இருப்பது எவ்வளவு முக்கியமானது என்பதை எபிரெயருக்கு எழுதிய நிருபம் எவ்வளவு முக்கியப்படுத்துகிறது என்பது எனக்கு ஒரு புதிராக இருக்கிறது. அவர் நித்திய தேவனாயிருக்கிறார், மேலும் எல்லாவற்றையும் தனது வல்லமையின் வார்த்தையால் நிலைநிறுத்துகிறவராகவும் இருக்கிறார். அவர் முழுமையாக தேவன் ஆவார். பின்னர், நம் பொருட்டு, முழுமையான மனிதனாகிய ஒரு பிரதான ஆசாரியர் நமக்குத் தேவைப்படுவதால், அவர் நமக்கு இருப்பதைப் போலவே மாம்சத்தையும் இரத்தத்தையும் எடுத்துக்கொள்கிறார் என்று எபிரெய நிருபம் கூறுகிறது. அவர் நமது சகோதரர். நம்முடைய மனித இயல்பைப் பகிர்ந்து கொள்கிறவர், ஒவ்வொரு பாடுகளையும் சோதனைகளையும் முழுமையான கீழ்ப்படிதலுடன் சகித்துக்கொண்டவர், மற்றும் மனித



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> சோதனைக்கு உட்படுத்தப்படுவதைப் பற்றி நன்கு அறிந்தவர் என்கிற நிலைப்பாட்டில் இருந்து நமக்காக அவர் பரிந்து பேச முடியும். ஆகையால் நமக்கு ஒரு மனித பிரதான ஆசாரியரும், ஒரு சகோதரனும் தேவை. நமக்காக பரிந்து பேசக்கூடியவரும் என்றென்றும் இருக்கக்கூடியவருமாகிய ஒரு தெய்வீக பிரதான ஆசாரியரும் நமக்குத் தேவை. ஒரே நபராகிய இயேசு கிறிஸ்துவிடமும் அது இருக்கிறது.
>
> Dr. டென்னிஸ் இ. ஜான்சன்

கிறிஸ்துவின் மனிதத்தன்மையானது நாம் அவரைப் பின்பற்றுபவர்களாக வாழும் விதத்தில் பல தாக்கங்களை ஏற்படுத்துகிறது. பவுல் 1 தீமோத்தேயு 2:5 இல் எழுதியது போல, நமக்கும் தேவனுக்கும் இடையில் ஒரு திறமையான மனித மத்தியஸ்தர் இருக்கிறார் என்பது இதன் அர்த்தமாகும், இதனால் அவருடைய மரணத்தின் மூலம் நாம் மன்னிப்பு பெற்று பிதாவுடன் முழுமையாக சமரசம் செய்தவர்களாக வாழ முடியும். ரோமர் 5:12-19 இல் பவுல் போதித்தபடி, இரண்டாவது ஆதாமாக, இயேசு தம்மை விசுவாசிக்கிறவர்களிடமிருந்து ஒரு புதிய மனித இனத்தை உருவாக்கி, சிருஷ்டிப்புக்குள் கனம் மற்றும் கவுரவ நிலைக்கு நம்மை மீட்டெடுக்கிறார். இதன் காரணமாக, தேவனைப் பிரியப்படுத்தும் வழிகளில் வாழவும், உலகத்தை அவருடைய பரலோக ராஜ்யத்தைப் போல மாற்றவும் இப்போது நமக்கு வல்லமை இருக்கிறது. ஒரு தனிப்பட்ட ரீதியில், நாம் நம் வாழ்க்கையில் பாவத்துடன் போராடும்போதும் வாழ்க்கையில் துன்பப்படும்போதும், நம்முடைய முழு மனித மீட்பர் நம்முடைய வேதனையையும் பலவீனங்களையும் புரிந்துகொண்டு அனுதாபப்படுகிறார் என்பதை அறிந்து, நம்பிக்கையுடன் கிருபையின் சிங்காசனத்தை அணுகலாம், நம்முடைய துன்பத்தைத் தணிக்கும், நம்முடைய குணத்தைக் கட்டியெழுப்பும், நம்முடைய நித்திய வெகுமதிகளை அதிகரிக்கும் வழிகளில் நமக்கு பதிலளிக்கும் வண்ணம் அவரை நாம் கொண்டிருக்க வேண்டும். கிறிஸ்துவின் முழு மனிதத்தன்மையானது நம் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் எண்ணற்ற வழிகளில் இவை ஒரு சில வழிகளாகும்.

இதுவரை நம் பாடத்தில், இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையையும், அவருடைய மனிதத்தன்மையையும் ஆராய்ந்தோம். இந்த கட்டத்தில், *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* குறிப்பிடப்பட்டுள்ள கிறிஸ்துவின் வேலையில் கவனம் செலுத்த நாம் தயாராக இருக்கிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# வேலை

கடந்த சில நூற்றாண்டுகளாக, இறையியலாளர்கள் இயேசுவின் வேலையைப் பற்றி இரண்டு கருத்துக்களின் அடிப்படையில் பேசுவது பொதுவானதாக இருக்கிறது. முதலாவதாக, அவரது தாழ்மை உள்ளது, அதில் அவர் ஒரு பலவீனமான மனித இயல்பைப் பெறுவதற்கும், பாவத்தால் வீழ்ந்த மனிதகுலத்தை மீட்பதற்காக பூமியில் துன்பப்படுவதற்கும் தன்னைத் தாழ்த்தினார். இரண்டாவதாக, அவருடைய மேன்மை உள்ளது, அதில் பிதாவாகிய தேவன் கிறிஸ்துவின் மறைக்கப்பட்ட தெய்வீக மகிமையை வெளிப்படுத்தினார், மேலும் அவருக்கு கூடுதல் கனத்தையும் புகழையும் கொடுத்தார். இந்தப் பிரிவுகள் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* வெளிப்படையாக குறிப்பிடப்படவில்லை, ஆனால் அவை இயேசுவின் வேலையைப் பற்றி சிந்திக்க மிகவும் உதவிகரமான வழிகளாக இருக்கின்றன.

இந்த பாடத்தில் இயேசுவின் வேலையைக் குறித்து நாம் பார்க்கும்போது, முதலில் அவருடைய தாழ்மைக்கும் அவருடைய மகிமையை மறைத்து வைத்திருக்கும் விஷயங்களுக்கும் திரும்புவோம். இரண்டாவதாக, அவருடைய மேன்மையையும், அவருடைய மகிமையை வெளிப்படுத்திய வேலையையும் அது எதிர்காலத்தில் மேலும் மகிமைக்கு வழிவகுக்கும் காரியத்தையும் நாம் கருத்தில் கொள்வோம். கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தின் போது அவர் தன்னை தாழ்த்தினார். அதிலிருந்து நாம் தொடங்குவோம்.

## தாழ்த்துதல்

இயேசு தன்னைத் தான் தாழ்த்தின காரியம் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* பின்வரும் வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது:

> [அவர்]பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரிக்கப்பட்டு,
> கன்னி மரியாளுக்குப் பிறந்தார்.
> அவர் பொந்தியு பிலாத்துவின் கீழ் பாடு அனுபவித்து,
> சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, அடக்கம் செய்யப்பட்டார்;
> அவர் பாதாளத்தில் இறங்கினார்.

இந்த ஒவ்வொரு வேலையிலும், தேவ குமாரன் தன் மகிமையை மறைத்து, யாருக்கும் தெரியாதபடி வைத்திருந்தார், மற்றும் துன்பத்திற்கும் கோபத்திற்கும் ஆளானார். குமாரனுடைய தெய்வீக இயல்பு மாறாததாகையால், அதைத் தாழ்த்த முடியவில்லை. ஆகையால் அவரது தாழ்மை அவரது மனித இயல்புக்கு மட்டுமே. இருந்தாலும், அவரது மனித இயல்பு அவருடைய நபருடன் முழுமையாக இணைந்திருப்பதால், அவரது தெய்வீக *நபரும்* தாழ்மையை முழுமையாக அனுபவித்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த பாடத்தில், இயேசு தன்னைத் தாழ்த்தினதைப் பற்றி இரண்டு தலைப்புகளின் கீழ் சுருக்கமாகக் கூறுவோம்: அவையாவன; அவர் மனித ரூபம் எடுத்தல் மற்றும் அவரது பாடுகள். அவர் ஒரு மனிதனாக பூமிக்கு வந்தபோது அவர் மனித ரூபம் எடுத்ததைப் பார்ப்பதன் மூலம் ஆரம்பிக்கலாம்.

## அவதாரம்

“அவதாரம்” என்ற இறையியல் சொல் இயேசு ஒரு மனித இயல்பை நிரந்தரமாக எடுத்துக்கொள்வதைக் குறிக்கிறது. உண்மையில், “அவதாரம்” என்ற சொல் “சரீரத்தை எடுத்துக்கொள்வது” என்பதாகும், அதாவது ஒரு மனித சரீரத்தைக் குறிக்கிறது. ஆனால் நாம் பார்த்தபடி, இயேசுவும் ஒரு மனித ஆத்துமாவை எடுத்துக் கொண்டார் என்பதை கிறிஸ்தவ இறையியல் தொடர்ந்து கூறி வருகிறது. ஆகவே, இறையியலில் அவதாரம் பற்றி பேசும்போது, நாம் பொதுவாக இயேசுவின் முழு மனித இயல்பைப் பற்றி குறிப்பிடுகிறோம். யோவான் 1:1, 14; பிலிப்பியர் 2:6-7; எபிரெயர் 2:14-17 போன்ற பல இடங்களில் கிறிஸ்துவின் அவதாரத்தைப் பற்றி வேதம் பேசுகிறது.

யோவான் 1:1, 14 என்பது “அவதாரம்” என்ற தொழில்நுட்ப வார்த்தையின் மூலமாக இருக்கலாம். அங்கே யோவான் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்:

> ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது... அந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணினார் (யோவான் 1:1, 14).

தேவ குமாரன் “மாம்சமானார்” என்று யோவான் சொன்னதைக் கவனியுங்கள் – இது அவதாரம் என்ற வார்த்தையின் நேரடி அர்த்தம் ஆகும். அவர் கூறுவது என்னவென்றால், ஒரு உண்மையான மனித சரீரம் உள்ள ஒரு உண்மையான மனித இயல்பை இயேசு எடுத்தார் என்பதாகும்.

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்,* இயேசுவின் அவதாரத்துடன் தொடர்புடைய வேலைகள் அவர் கருவில் உருவானதும் அவரது பிறப்பும் ஆகும். இந்த நிகழ்வுகளைக் குறித்து நாம் முன்பு இயேசுவின் தோற்றம் பற்றிய விவாதத்தில் பேசினோம், மேலும் அவை அவருடைய மனிதத்தன்மையை நிரூபிக்கின்றன என்பதை வெளிப்படுத்தினோம். இந்த கட்டத்தில், மேசியாவாக இயேசுவின் வேலையின் கண்ணோட்டத்தில் இதே நிகழ்வுகளை மீண்டும் பரிசீலிக்க விரும்புகிறோம். மனித அவதாரம் ஏன் அவசியப்பட்டது? இயேசு அதன் மூலம் என்ன செய்தார்?

இயேசுவின் அவதார வேலை குறைந்தது மூன்று காரியங்களை நிறைவேற்றியது என்று வேதம் போதிக்கிறது: முதலாவதாக, தாவீதின் வழியில் ராஜாவாக இருப்பதற்கான சட்டபூர்வமான உரிமையை அது தேவ குமாரனுக்கு அளித்தது. இரண்டாவதாக, இது ஒரு பயனுள்ள பிரதான ஆசாரியர் ஆவதற்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவருக்குத் தேவையான இரக்கத்தையும் அனுதாபத்தையும் கொடுத்தது. மூன்றாவதாக, இயேசு பாவத்திற்கான பரிகார பலியாக மாற மனித அவதாரம் அவருக்கு அவசியப்பட்டது. தாவீதின் வழியில் வருகிற ராஜா ஒரு மனிதனாக இருக்க வேண்டும் என்பதில் தொடங்கி இந்த காரியங்கள் ஒவ்வொன்றையும் சுருக்கமாகப் பார்ப்போம்.

தேவன் தாவீதுக்கு அளித்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்காக மேசியா மனிதராக இருக்க வேண்டும் என்று நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். ஆகவே, இந்த கட்டத்தில், இயேசுவின் அவதார வேலை அவர் தாவீதின் சிங்காசனத்தில் அமருவதற்கான உரிமையை எவ்வாறு வழங்கியது என்பதைப் பார்க்க விரும்புகிறோம். நமக்கு முன்னால் உள்ள பிரச்சனை என்னவென்றால், தாவீதின் சிங்காசனத்தில் அமர்வதற்கான சட்டபூர்வமான உரிமை அவருடைய குமாரர்களுக்கு மட்டுமே உண்டு. ஆகவே, தாவீதின் வழியில் வந்த ஒரு மனித தந்தை இயேசுவுக்கு இருந்தால் மட்டுமே அவர் தாவீதின் சிங்காசனத்தை கோர முடியும்.

இந்த சிக்கலை தீர்க்க, யோசேப்புக்கு நிச்சயம் செய்யப்பட்ட கன்னி மரியாள் மூலம் இயேசு அவதரித்தார். மத்தேயு 1 மற்றும் லூக்கா 3 இல் உள்ள இயேசுவின் வம்ச வரலாறில் நாம் காண்கிறபடி, யோசேப்பு சட்டரீதியாக தாவீதின் வம்சத்தில் வந்த நேரடி சந்ததியாவார். ஆகவே, யோசேப்பு மரியாளை திருமணம் செய்து இயேசுவை தத்தெடுத்தபோது, இயேசு யோசேப்பின் சட்டரீதியான வம்சாவளியானார், அதனுடன் தான் மேசியா ராஜாவாக இருப்பதற்கான உரிமையையும் பெற்றார்.

தாவீதின் வழியில் ராஜாவாக இருப்பதற்கான சட்டபூர்வமான உரிமையை தேவ குமாரனுக்குக் கொடுத்தது மட்டுமல்லாமல், மனித அவதாரம் அவருடைய ஜனங்கள் சார்பாக ஒரு பயனுள்ள பிரதான ஆசாரியராக இருப்பதற்கு அவருக்குத் தேவையான இரக்கத்தையும் அனுதாபத்தையும் கொடுத்தது.

> இயேசுவின் அவதாரம் அவரை நம் பலவீனங்களை உணரக்கூடிய ஒரு பிரதான ஆசாரியராக்கியது என்று வேதம் சொல்கிறது. அதாவது, அவர் மனிதனாக இருந்து நம்மோடும் நமக்காகவும் அவர் பெற்ற அனுபவத்தை அறிந்திருக்காவிட்டால், அவர் மிகவும் பயனுள்ள பிரதான ஆசாரியராக இருந்திருக்க மாட்டார் என்பது இதன் அர்த்தமாகும். பல்வேறு வழிகளில் இது வெளிப்பட்டது. ஒன்று, இயேசு தனது சொந்த வாழ்க்கையிலும் அனுபவத்திலும் பாவத்தால் வீழ்ச்சியடைந்த உலகில் நாம் சந்திக்கும் அதே அளவிலான மனித பிரச்சனைகளை கையாளவும் எதிர்கொள்ளவும் செய்தார், ஆகையால் மாம்சத்தில் வந்த தேவன் இந்த வீழ்ச்சியடைந்த உலக அனுபவங்களில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வாழ்கிறவர்களின் அதே வகையான இதய வலிகள், துக்கங்கள், ஏமாற்றங்கள், துரோகங்கள் மற்றும் காயங்களை அறிந்தவராயிருக்கிறார். இது அவருக்கு தத்துவார்த்தமான ஒரு காரியம் கிடையாது, விண்வெளியின் ஆழமான இடத்தில் இருந்து, நித்தியத்தின் தூசி நிறைந்த கடந்த காலங்களில் அவர் நின்று ஊகித்த ஒன்று இதுவல்ல. இது அவர் நம் ஏழை மாம்சத்திலும் இரத்தத்திலும் உலகிற்கு வந்து தாமே அனுபவித்த ஒன்றாகும்.
>
> Dr. ஜே. லிகோன் டங்கன் III

எபிரெயர் 2:17-18 இல் இயேசு மனுவுரு எடுத்ததின் இந்த அம்சத்தைப் பற்றி எபிரெயர் நிருபத்தின் எழுத்தாளர் விவாதித்தார். அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்:

> [இயேசு] ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது … அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார் (எபிரெயர் 2:17-18).

தாவீதின் வழியில் ராஜாவாக இருப்பதற்கான உரிமையையும், பயனுள்ள பிரதான ஆசாரியராக இருப்பதற்கு தேவையான அனுபவத்தையும் கொடுத்தது மட்டுமல்லால், இயேசு எடுத்த மனித அவதாரமானது தம்முடைய ஜனங்களின் பாவங்களுக்காக பரிகார பலியாக மாறவும் உதவியது.

இந்த பாடத்தில் நாம் முன்பு பார்த்தது போல, இயேசு தம் ஜனங்களுக்கு பதிலாக மரிப்பதற்கு மனிதனாக இருக்க வேண்டியிருந்தது. ஆனால் பாவ பரிகாரம் செய்வற்கு அவருடைய மனிதத்தன்மை ஏன் மிகவும் அவசியமானது? மனிதனுடைய பாவத்துக்கு தண்டனையாக மரணத்தை தேவன் விதித்திருந்தார் என்பதுதான் இதற்கு பதில். இதை ஆதியாகமம் 2:17, ரோமர் 5:12 மற்றும் 6:23, யாக்கோபு 1:15 மற்றும் பல இடங்களில் வேதம் போதிக்கிறது. ஆதாமில் தொடங்கி, பாவம் முழு மனித இனத்திற்கும் பரவியது, மேலும் அது மரணத்தை சட்டப்பூர்வமான தண்டனையாகக் கொண்டு வந்தது. இதனால்தான் ஒரு உண்மையான, மாம்சம் மற்றும் இரத்தமுள்ள மனித மரணத்தால் மட்டுமே தேவன் அவசியப்பட்டதை பூர்த்தி செய்ய முடியும்.

ரோமர் 5:15-19 இல் இயேசுவின் மனிதத்தன்மைக்கும் நம்முடைய இரட்சிப்பிற்கும் உள்ள தொடர்பை பவுல் விளக்கிய விதத்தைக் கவனியுங்கள்:

> ஒருவனுடைய மீறுதலினாலே அநேகர் மரித்திருக்க, தேவனுடைய கிருபையும் இயேசுகிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர்மேல் அதிகமாய்ப் பெருகியிருக்கிறது! … ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே… ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள் (ரோமர் 5:15-19).

இயேசுவின் மனித நீதியே ஆதாமின் மனித பாவத்தை எதிர்கொள்ளவும் குணப்படுத்தவும் செய்யும் என்று பவுல் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். ஆதாம் உடைத்ததை சரிசெய்ய இயேசு மனிதராக இருக்க வேண்டும் என்பதை பவுல் அதிகமாக தெளிவுபடுத்தினார். தேவன் மனிதகுலத்திற்கு விதித்த தண்டனையை போக்குவதற்கும், அவருடைய நீதியை மற்ற மனிதர்களுக்கும் பரப்புவதற்கும் அவர் மனிதராக இருக்க வேண்டியிருந்தது.

> சில நேரங்களில் நாம் பழமைவாதிகளாக, சுவிசேஷ கிறிஸ்தவர்களாக, கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை அதிகம் வலியுறுத்துகிறோம், உண்மையில் அவருடைய மனிதத்தன்மையானது நம்மை இரட்சிக்கிறது என்பதை மறந்து விடுகிறோம். இயேசு உண்மையான மனிதராக ஆனதால், அவரால் நம்முடைய பாவங்களுக்காகவும் நமக்காகவும் பாடு பட்டு மரிக்க முடிந்தது. ஆகவே, நம்முடைய இரட்சிப்புக்கு இயேசுவின் மனிதத்தன்மை அவசியமாகும்.
>
> Dr. மார்க் எல். ஸ்ட்ராஸ்

இயேசு மனுவுரு எடுத்தது பற்றிய இந்த புரிதலை மனதில் கொண்டு, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* குறிப்பிடப்பட்டுள்ள அவரின் தாழ்மை குறித்த பணியின் இரண்டாவது அம்சமான அவரது பாடுகளைப் பற்றி ஆராய்வோம்.

## பாடு

"பாடு" என்ற இறையியல் சொல் கிரேக்க வினைச்சொல்லான *பாஸ்கோ*விலிருந்து வந்தது, அதாவது இதன் அர்த்தம் "துன்பப்படு"என்பதாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவர் கைது செய்யப்பட்ட இரவில் தொடங்கி, இது இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் குறிக்கிறது. *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின்* இந்த வரிகளில் இயேசுவின் பாடு குறிப்பிடப்பட்டுள்ளது.

> அவர் பொந்தியு பிலாத்துவின் கீழ் பாடு அனுபவித்து,
> சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, அடக்கம் செய்யப்பட்டார்;
> அவர் பாதாளத்தில் இறங்கினார்.

இயேசு கைது செய்யப்படுதல், பாடு அனுபவித்தல் மற்றும் சிலுவையில் அறையப்படுதல் போன்ற கதைகளை பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆகவே அந்த விவரங்களை இங்கே ஆராய்வதற்குப் பதிலாக, இந்த நிகழ்வுகளுக்கு இயேசு தன்னை கீழ்படுத்தியதற்கான காரணத்தைப் பார்ப்போம்.

இயேசுவின் பாடுகளைப் பொறுத்தவரை, இயேசுவுக்கு கீழ்ப்படிதலைக் கற்பிப்பதும், பிதாவாகிய தேவனிடம் அவரை ஒப்படைப்பதும் அவசியம் என்று வேதம் விளக்குகிறது. எபிரெயர் 5:8 இல் நாம் வாசிக்கிறது போல:

> [இயேசு] குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே
> கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் (எபிரெயர் 5:8).

1 பேதுரு 2:20-21 இல் பேதுரு எழுதியது போல:

> நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே
> சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும்.
> இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள், ஏனெனில்,
> கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய
> அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு
> மாதிரியைப் பின்வைத்துப்போனார் (1 பேதுரு 2:20-21).

கிறிஸ்து தனது பாடுகளின் மூலம், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார், இதன் மூலம் தன்னை பிதாவிடம் ஒப்படைத்தார். பிதாவுக்குக் கீழ்ப்படிவதன் மூலம், அவர் ஒரு நித்திய வெகுமதியைப் பெற்றார் – அவர் அந்த வெகுமதியை இப்போது நம்முடன் கிருபையாக பகிர்ந்து கொள்கிறார்.

ஆனால் பிலாத்துவின் கீழ் கிறிஸ்து துன்பப்பட்டதுடன் அவருடைய பாடுகள் முடிவடையவில்லை; அது அவர் சிலுவையில் அறையப்பட்டு மரணமடையும் வரை தொடர்ந்தது. இது கிறிஸ்துவின் தாழ்மையான வேலையின் மிகச்சிறந்த அம்சமாக இருக்கலாம்: அவருடைய மரணமே நம்முடைய பாவத்திற்கான பரிகாரம் செய்து நம்முடைய இரட்சிப்பை நிறைவேற்றியது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஒருவர் இதை இப்படி கூற முடியுமானால், பாவத்திற்காக கர்த்தராகிய இயேசு அடைந்த மரணம் (புதிய ஏற்பாடு முழுவதும் அது இவ்வாறு தான் முன்வைக்கப்படுகிறது) பலன் அளித்தது என்று கூறலாம், ஏனென்றால் அவர் நம்முடைய தண்டனைக்கு பதிலாளி ஆனார். "பதிலாள்" என்பது அவர் நம்முடைய இடத்திற்கு வந்தார் என்பதாகும், "தண்டனை" என்பது நம்முடைய நியாயத்தீர்ப்பையும் தண்டனையையும் சகித்துக்கொள்வதற்காக அவர் நம் இடத்திற்கு வந்தார் என்பதை சுட்டிக்காட்டுகிறது, இது தேவனுடைய பிரமாணத்தை மீறினதால் நாம் அனைவரும் தண்டனைக்கு பாத்திரவான்களானோம் – இந்த தண்டனை தேவனுடைய பிரமாணத்தை மீறியதற்காக அவர் நமக்கு கொடுக்க வேண்டிய ஒன்றாக இருந்தது. தேவனின் இயல்பு அத்தகையது, அதாவது இது உண்மையில் அவருடைய பரிசுத்தம் ஆகும், பாவம் தண்டிக்கப்பட வேண்டும் என்பது அவருடைய இயல்பாகும். தேவன் திட்டமிட்ட அற்புதமான, ஞானமான, அன்பான இரட்சிப்பின் வழி என்பது நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய தண்டனையை திசை திருப்புவதாகும், அதை நான் வேறு விதத்தில் கூறினால், பாவமறியாதவரும் குறையில்லாதவருமாகிய அவருடைய குமாரன் மீது திருப்புவதாகும், அவர் பழைய ஏற்பாடு முழுவதும் ஜனங்களிடம் கட்டளையிடப்பட்ட எந்த வித குறைபாடுமில்லாத மிருக பலிகளின் மாதிரியை நிறைவேற்றுகிறார் .
>
> Dr. ஜே. ஐ. பேக்கர்

அப்போஸ்தலனாகிய பவுல் சிலுவையில் அறையப்படுதலை சுவிசேஷத்தின் இருதயம் என்று அடிக்கடி விவரித்தார். ரோமர் 6:6, 1 கொரிந்தியர் 1:17-18, கலாத்தியர் 6:14, கொலோசெயர் 1:20 போன்ற இடங்களில் இதைக் காண்கிறோம். ஒரு எடுத்துக்காட்டிற்காக, கலாத்தியர் 2:20-21 யை கவனிக்கவும்:

> கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன், இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை;

> நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால்,
> கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே! (கலாத்தியர் 2:20-21).

கிறிஸ்துவின் மரணம் நம் இரட்சிப்பை நிறைவேற்றிய மைய வேலையாகும். இந்த காரணத்திற்காக, இது வரலாறு முழுவதும் சுவிசேஷ விளக்கங்களின் மைய உண்மையாக இருந்து வருகிறது.

இயேசு சிலுவையில் அறையப்பட்ட பின்னர், அவரது சரீரம் ஒரு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது, அங்கு அது மூன்று நாட்கள் உயிரற்றதாக இருந்தது. முழு மனிதனாக இருந்த இயேசு, மரணத்தின் சாதாரண மனித அனுபவத்தையே கொண்டிருந்தார். *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* அவர் பாதாளத்தில் இறங்கினார் என்கிற உண்மையை இந்த வார்த்தைகளில் பதிவு செய்கிறது. இந்த நேரத்தில், இயேசுவின் சரீரம் கல்லறையில் இருந்தது, அவருடைய ஆத்துமா மரித்தவர்களின் இடத்திற்கு இறங்கியது.

இப்போது, நவீன இறையியலாளர்கள் ”அவர் பாதாளத்தில் இறங்கினார்” என்ற சொற்றொடரின் அர்த்தத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை நாம் குறிப்பிட வேண்டும். இன்று பல சபைகள் இயேசு அடக்கம் செய்யப்பட்டார் என்பது மட்டுமே இதன் அர்த்தம் என்று விளக்குகின்றன. ஆனால் இது *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* அர்த்தப்படுத்தியது அல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது. ஒரு விஷயம் என்னவென்றால், இயேசு அடக்கம் செய்யப்பட்டார், மற்றும் பாதாளத்தில் இறங்கினார் என்ற இரண்டையும் விசுவாச அறிக்கை குறிப்பிடுகிறது. நமக்குத் தெரிகிறபடி, இந்த சொற்றொடர்கள் வரலாற்று பதிவில் தனித்தனியாகவும் தொடர்ச்சியானவைகளாகவும் இருக்கின்றன. இன்னொரு விஷயம் என்னவென்றால், ”பாதாளம்” என்ற சொல் ”பூமிக்கு கீழ்” என்று பொருள்படும் என்பது உண்மைதான் என்றாலும், வேதத்திலும் ஆரம்பகால சபையின் எழுத்துக்களிலும் அதன் பயன்பாடு எப்போதுமே மரித்தவர்களின் ஆத்துமாக்கள் இருக்கிற பாதாள உலகத்தைக் குறிக்கிறது. ஆரம்பகால சபையில் இது இயல்பான அர்த்தமாக இருந்தது என்று நாம் நினைக்கலாம் – பண்டைய கிறிஸ்தவர்கள் பொதுவாக ”பாதாளம்” என்ற வார்த்தையை பயன்படுத்தும் போது அவர்கள் மனதில் வைத்திருந்த அர்த்தம் இது தான்.

இந்த காரணங்களுக்காக, இயேசுவின் ஆத்துமா உண்மையில் அவருடைய மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில் பாதாள உலகத்திற்கு இறங்கியது என்பதை போதிக்க *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* நோக்கம் கொண்டது என்ற முடிவுக்கு வருவது சிறந்தது. ஆனால் இந்த பாதாளத்தின் *இயல்பு* என்ன?

பண்டைய உலகில், பிரபஞ்சம் பெரும்பாலும் செங்குத்து கட்டமைப்பின் மொழியில் விவரிக்கப்பட்டது. மனிதர்கள் வாழ்ந்த பூமி நடுவில் இருந்தது. தேவன் மற்றும் அவரது தேவதூதர்கள் இருக்கும் பரலோகம் வானத்தில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இருப்பதாக பேசப்பட்டது. பூமியின் அடியில் ஒரு நிழல் பாதாள உலகம் இருந்தது, அங்கு மரித்தவர்களின் ஆத்துமாக்கள் அனைத்தும் இருந்தன. எபிரெய பழைய ஏற்பாட்டில், இது பொதுவாக *ஷீயோல் என்று* அழைக்கப்பட்டது; கிரேக்க புதிய ஏற்பாட்டிலும், பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிப்பெயர்ப்புகளிலும், இது பொதுவாக *ஹெடிஸ்* என்று அழைக்கப்பட்டது.

நல்லவர்கள் மற்றும் பொல்லாதவர்களின் ஆத்துமாக்கள் கடைசி நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருந்ததால் அங்கே இருப்பதாக பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டது. இருப்பினும், புதிய ஏற்பாட்டில், *ஹெடிஸ்* வழக்கமாக லூக்கா 10:15 இல் உள்ளதைப் போல பொல்லாத ஆத்துமாக்களின் இருப்பிடத்தைக் குறிக்கிறது. இருந்தாலும்கூட, குறைந்தபட்சம் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு முன்பு, நீதிமான்களின் ஆத்துமாக்கள் *ஹெடிஸில்* இருந்தன என்பதை புதிய ஏற்பாடு உறுதிப்படுத்துகிறது. மிக முக்கியமாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:27-29, நீதியுள்ள மனிதனாகிய தாவீது ராஜா *ஹெடிஸில்* இருப்பதைப் பற்றி பேசுகிறது.

*ஹெடிஸ்* அல்லது பாதாளத்தில் உள்ள அனைவரும் சமமாக நடத்தப்பட்டார்கள் என்பது இதன் அர்த்தமல்ல. லாசரு மற்றும் ஐசுவரியவான் பற்றிய இயேசுவின் உவமை லூக்கா 16:19-31 இல் காணப்படுகிறது, ஒரு பெரும்பிளவு நீதிமான்களின் ஆத்துமாக்களுக்கும் துன்மார்க்கரின் ஆத்துமாக்களுக்கும் இடையில் இருந்து பிரிக்கிறது என்பதை இது குறிக்கிறது. துன்மார்க்கர்கள் வேதனையில் துன்பப்பட்டபோது, நீதிமான்கள் ஆறுதலடைந்தார்கள். இந்த உவமையில், ஆபிரகாம் ஆறுதலளிக்கும் இடத்தில் இளைப்பாறினான். இந்த காரணத்திற்காக, இறையியலாளர்கள் பெரும்பாலும் *ஹெடிஸின்* இந்தப் பக்கம் இருக்கிற பகுதியை "ஆபிரகாமின் பக்கம்" அல்லது "ஆபிரகாமின் மடி" என்று அழைத்தனர்.

மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதிய சபை பிதா டெர்டுல்லியான், இந்த *ஹெடிஸ்* இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்ததில் பொதுவான நம்பிக்கையை வெளிப்படுத்தினார். *ஆன் த ரிசரக்சன் ஆப் தி பிளஷ்* பற்றிய அவரது படைப்பின் 17 ஆம் அத்தியாயத்தில் அவர் எழுதியதைக் கவனியுங்கள்:

> ஹெடிஸில் இருக்கிற சில ஆத்துமாக்கள் வேதனையை அனுபவிக்கின்றன மற்றும் சில ஆத்துமாக்கள் ஆசீர்வாதங்களை அனுபவிக்கின்றன … என்கிற உண்மை லாசருவின் விஷயத்தால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

மேலும் சபை பிதா இக்னேஷியஸ், கி. பி. 107 இல் தன்னுடைய *எப்பிஸ்டல்ஸ் டு த டிராலியன்ஸ்* என்கிற கடிதத்தில் கூறினார்:

> பூமிக்கு அடியில் இருக்கிறவர்களால், [அதாவது] கர்த்தருடன் சேர்ந்து எழுந்த கூட்டம் என்பது இதன் பொருள் ஆகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ”நித்திரையிலிருந்த பரிசுத்தவான்களின் பல சரீரங்கள் உயிருடன் எழுந்தன,” மற்றும் அவர்களின் கல்லறைகள் திறக்கப்பட்டுள்ளன என்று வேதவசனம் கூறுகிறது. அவர் உண்மையில் ஹெடிஸில் இறங்கினார், ஆனால் அவர் ஒரு கூட்டத்தோடு உயிர்த்தெழுந்தார்; உலகின் தொடக்கத்திலிருந்து இருக்கிற பிரிவின் சுவரை கிழித்தார்.

ஆகவே, இயேசு பாதாளத்தில் இறங்கினார் என்று விசுவாச அறிக்கை கூறும்போது, பெரும்பாலும் அவருடைய மனித ஆத்துமா காவலிலுள்ள ஆவிகளின் இடத்திற்கு இறங்கியது என்பதே இதன் அர்த்தமாகும். குறிப்பாக, அவர் நீதிமான்களின் ஆத்துமாக்கள் இருக்கிற பகுதிக்கு இறங்கினார், துன்மார்க்கர் துன்புறுத்தப்படும் பகுதிக்கு செல்லவில்லை. பாதாளத்தின் இந்த பகுதியில் இயேசு தங்கியிருந்தது அவருடைய வேலையின் அவசியமான ஒரு பகுதியாக இருந்தது, ஏனெனில் அது அவருடைய ஆத்துமாவை உண்மையான மனித மரணத்தின் நீதி தண்டனைக்கு கீழ்ப்படுத்தியது.

பாவத்தால் வீழ்ச்சியடைந்த உலகில் உண்மையிலேயே மனிதனாக இருப்பதன் அர்த்தம் என்ன என்பதை இயேசுவின் பாடு நமக்குக் காட்டுகிறது. நம்முடைய பரிபூரண தேவன் கூட பாவத்தை எதிர்த்து நின்று அதற்கு பரிகாரம் தேடும்போது அவதிப்பட நேர்ந்ததென்றால், நிச்சயமாக பரிபூரணர்கள் அல்லாத நாமும் துன்பப்படுவோம். உண்மையில், 2 தீமோத்தேயு 3:12 இல் பவுல் எழுதியது போல, தேவபக்தியுள்ள வாழ்க்கையை வாழ முற்படும் அனைவருக்கும் துன்பம் உறுதி செய்யப்படுகிறது. ஆனால், நாம் துன்பப்படுகையில், கிறிஸ்துவும் துன்பப்படுகிறார் என்பதையும் வேதம் போதிக்கிறது. அவர் நம் வலியில் அனுதாபம் கொண்டவர் மற்றும் நம்மை ஆறுதல்படுத்த விருப்பமாக உள்ளார் என்பதும் தான் இதன் அர்த்தமாகும். பவுல் கொலோசெயர் 1:24 இல் போதித்தபடி, இறுதியில் நம் மூலமாக கிறிஸ்துவின் பாடுகள் முழுமையடையும். அது நடக்கும்போது, அவர் மகிமையில் திரும்புவார் மற்றும் நாம் நித்திய சுதந்தரங்களைப் பெறுவோம். நம் பாடுகள் நோக்கம் இல்லாமல் இல்லை; எல்லா சிருஷ்டிப்புகளையும் முழுமையாக மீட்டெடுக்க தேவன் பயன்படுத்தும் வழிமுறைகளில் இதுவும் ஒன்றாகும்.

இப்போது நாம் இயேசுவின் தாழ்மை சம்பத்தப்பட்ட வேலையைப் பார்த்திருக்கிறோம், அவருடைய தெய்வீக மகிமை மீண்டும் வெளிப்பட்டபோது, அவருடைய மேன்மையான வேலையை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

## உயர்த்தப்படுதல்

கிறிஸ்துவின் மேன்மையைப் பற்றி நாம் பேசும்போது, அது அவருடைய மறைக்கப்பட்ட மகிமையை வெளிப்படுத்துவதை விட அதிகம் என்பதை நினைவில் கொள்வது அவசியம். அவருடைய தாழ்மையால், குமாரன் முதலில் இருந்ததை விட அதிக மகிமையைப் பெற்றார். அவர் பிதா ஆசீர்வதித்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேலைகளைச் செய்தார், அவருடைய தியாகத்தால் ஒரு கூட்ட ஜனங்களை தனது சொந்த சுதந்தரமாக வாங்கினார், அதோடு கூட தேவனுடைய ராஜ்யத்தின் சிங்காசனத்தில் அமரக்கூடிய உரிமையும் கிடைத்தது. இந்த கிரியைகளால், குமாரனின் தகுதி, மதிப்பு மற்றும் மகிமை ஆகியவை உண்மையில் அவருடைய தாழ்மையின் விளைவாக அதிகரித்தது.

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* பின்வரும் கட்டுரைகளில் கிறிஸ்துவின் மேன்மையைப் பற்றி குறிப்பிடுகிறது:

> மூன்றாம் நாள் அவர் மரணத்திலிருந்து மீண்டும்
> உயிர்த்தெழுந்தார்.
> அவர் பரத்திற்கு ஏறினார்
> சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது
> பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார்.
> அங்கிருந்து அவர் ஜீவனுள்ளவர்களையும்
> மரித்தவர்களையும் நியாயந்தீர்க்க வருவார்.

கிறிஸ்துவின் தெய்வீக இயல்பு எப்போதும் மாறாமல் உயர்வடைந்தது. அது மரணத்திற்கு கீழ்ப்படுத்தப்படவில்லை, அல்லது பரலோகத்தில் அவரது சிங்காசனத்திலிருந்து அகற்றப்படவில்லை. ஆகவே, தேவ குமாரன் உயர்வடைவது அவருடைய மனித இயல்புக்கு மட்டுப்படுத்தப்பட்டது. ஆனாலும், கிறிஸ்துவின் மனித இயல்பில் ஏற்பட்ட மற்ற எல்லா அனுபவங்களையும் போலவே, அவருடைய தெய்வீக *நபரும்* மேன்மையை முழுமையாக அனுபவித்தார்.

கிறிஸ்துவின் மேன்மையைப் பற்றிய நம் விவாதம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலில், கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததைப் பற்றி பேசுவோம். இரண்டாவதாக, அவரின் பரம் ஏறுதலைப் பற்றி பேசுவோம். மூன்றாவதாக, பிதாவின் வலது பாரிசத்தில் அவரது சிங்காசனத்தின் அர்த்தத்தை ஆராய்வோம். நான்காவதாக, அவர் வழங்கும் எதிர்கால நியாயத்தீர்ப்பைக் குறிப்பிடுவோம். சிலுவையில் அறையப்பட்ட மூன்று நாட்களுக்குப் பிறகு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததிலிருந்து ஆரம்பிக்கலாம்.

## உயிர்த்தெழுதல்

பல கிறிஸ்தவர்கள் இதை உணரவில்லை, ஆனால் அவருடைய மரணம் போலவே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நம்முடைய இரட்சிப்புக்கு முக்கியமானது. இதனால்தான் 1 பேதுரு 3:21 இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால் இரட்சிக்கப்படுவதைப் பற்றி பேசுகிறது. அதை நாம் அடிக்கடி அந்த வகையில் விவரித்தாலும் நம்முடைய இரட்சிப்பு என்பது ஒரு பரிசாக நமக்குக் கொடுப்பதற்கு கிறிஸ்து நம் சார்பாக வாங்கிய ஒன்றல்ல என்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். மாறாக, இயேசு அவருடனான ஐக்கியத்தின் *மூலம்*



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நமக்கு அளிக்கும் ஒரு பரிசு இது – “கிறிஸ்துவில்” இருப்பது என்பது இது தான், இதைப் பற்றி புதிய ஏற்பாட்டின் நிருபங்களில் நாம் அதிகம் கேட்கிறோம்.

அவருடைய மரணத்தின் மூலம் நாம் மன்னிக்கப்படுகிறோம், ஏனென்றால், நாம் அவருடன் ஒன்றாக சிலுவையில் மரித்தோம். அவருடைய உயிர்த்தெழுதலின் மூலம் நாமும் புதிய ஜீவனில் எழுப்பப்பட்டதால் நித்திய ஜீவனைப் பெறுகிறோம். ரோமர் 6:3-11, மற்றும் 8:10-11, 2 கொரிந்தியர் 5:14 மற்றும் 13:4, கொலோசெயர் 2:11–3:3 மற்றும் பல இடங்களில் வேதம் இதைப் பற்றி பேசுகிறது. ஒரு உதாரணத்திற்கு, பவுல் இந்த வார்த்தைகளை ரோமர் 6:4-5 இல் எழுதினார்:

> பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட … அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம் (ரோமர் 6:4-5).

சுருக்கமாகச் சொன்னால், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் இயேசு செய்த கிரியையானது நாம் விசுவாசத்திற்குள் வரும்போது நாமும் புதிய ஆவிக்குரிய வாழ்க்கையைப் பெறுவோம் என்பதையும், அவரைப் போலவே நாமும் எதிர்காலத்தில் நம்முடைய உயிர்த்தெழுந்த மற்றும் மகிமைப்படுத்தப்பட்ட சரீரங்களைப் பெறுவோம் என்பதையும் உறுதிசெய்தது. இந்த அர்த்தத்தில் பார்க்கும்போது, அவருடைய மேன்மை நம்முடைய மேன்மையாகும், இது நமக்கு கண்ணியத்தையும் மகிமையையும் மரியாதையையும் தருகிறது.

> மரிப்பதில் இயேசு பாவத்தின் வல்லமைக்கு அப்பாற்பட்டவர். உங்களால் ஒரு மரித்த மனிதனை சோதிக்க முடியாது. அவர் அவர்களின் பிசாசு வல்லமைகளுக்கு அப்பாற்பட்டவர். ஆனால் பாவம் தன்னுடைய வலிமையான கூட்டாளியான மரணத்தை இயேசுவின் பக்கம் இழுக்கிறது. ஆகவே, அவர் மரணத்தை சந்திக்க இயேசுவை அனுமதிக்கிறார், மரணத்தை சந்தித்த இயேசு மரணத்தை வெல்கிறார். அவருடைய ஜனங்களுக்கு அதன் தாக்கங்கள் பிரமாதமானவைகளாக இருக்கின்றன. ஆகையால், வெளிப்படுத்தின விசேஷம் 1:18 இல், நான் உயிருள்ளவனாயிருக்கிறேன், நான் மரித்தேன், இதோ, நான் என்றென்றும் உயிரோடு இருக்கிறேன், நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> உடையவராயிருக்கிறேன் என்று உயிர்த்தெழுந்த மகிமையான கிறிஸ்து கூறுகிறார். தன்னை விடுவிப்பதற்காக அவர் அவற்றைப் பயன்படுத்தினார், ஆனால் அவர் இன்னும் அவற்றை வைத்திருக்கிறார், ஏனென்றால் ஒரு நாள் அவர் தனது ஜனங்களை மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பார்.
>
> Dr. நாக்ஸ் சாம்ப்ளின்

> இயேசுவின் சிலுவையும் உயிர்த்தெழுதலும் நம்முடைய பாவ மன்னிப்பு மற்றும் பாவங்களுக்கான பரிகாரத்தைப் பெறுவதற்கான வழிமுறையாக மட்டும் இல்லாமல், இன்னும் மிக முக்கியமாக, உயிர்த்தெழுதலானது உலகின் புதிய மற்றும் இறுதி யுகத்தை தொடங்கக் கூடியதாகவும் இருக்கிறது. புது சிருஷ்டி (வேதம் அதை அழைக்கிறது போல) அந்த கல்லறையில், அதாவது அந்த வெற்று கல்லறையில் தொடங்குகிறது. இது வரலாற்றின் புதிய மையப்பகுதி / புதிய மைய புள்ளியாகவும் மற்றும் புதிய பிணைப்பாகவும் இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் காரணமாக நாம் அனைவரும் கடைசி காலங்களில் வாழ்கிறோம். இந்த முடிவின் ஆரம்பத்தை அவர் துவக்கி வைத்துள்ளார், கிறிஸ்தவனின் நம்பிக்கை என்னவென்றால், அந்த ஆரம்பம் இப்போது கிறிஸ்துவின் இரண்டாவது வருகையிலேயே அதன் நிறைவைக் காணும், இது வேதவசனங்களின்படி, ஒரு புது சிருஷ்டிப்பு என்று அழைக்கப்படுகிறது.
>
> Dr. ஜோனதான் டி. பென்னிங்டன்

உயிர்த்தெழுதலோடு கூட, இயேசுவின் உயர்த்தப்படுதலானது பூமியிலிருந்து பரலோகத்திற்கு அவர் பரமேறுதலையும் உள்ளடக்கியிருக்கிறது.

## பரமேறுதல்

பரமேறுதல் என்பது இயேசு சரீரத்துடன் பரலோகத்திற்குச் சென்ற நிகழ்வாகும். உயிர்த்தெழுந்த நாற்பது நாட்களுக்குப் பிறகு, இயேசு மேகங்களின் மீது பரலோகத்திற்கு எழுந்தார். லூக்கா 24:50-51, மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:6-11 ஆகிய இரண்டு பகுதிகளிலும் பரமேறுதலைக் குறித்து லூக்கா விவரித்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயேசுவின் பரமேறுதல் பணியின் மூலம் அவர் பூமியில் இருந்தபோது அவரால் செய்ய முடியாத பல காரியங்களைச் செய்தார். உதாரணமாக, யோவான் 14:2-3 இல், இயேசு அப்போஸ்தலர்களிடம் பரலோகத்தில் அவர்களுக்கு இடங்களை ஆயத்தம் செய்ய போய்க்கொண்டிருப்பதாகக் கூறினார். யோவான் 16:7 இல், அவர் முதலில் பரலோகத்திற்கு ஏறாதவரை சபையை ஊழியத்திற்காக பலப்படுத்த பரிசுத்த ஆவியானவரை அனுப்ப முடியாது என்று கூறினார்.

இதற்கு அப்பால், சிலுவையில் ஆரம்பித்த பரிகார வேலையை முடிக்க இயேசு உண்மையில் பரலோகத்திற்கு ஏற வேண்டியிருந்தது. எபிரெய நிருபத்தின் எழுத்தாளர் தனது புத்தகத்தின் 8–9 அதிகாரங்களில் இந்த விஷயத்தை வாதிட்டார். சுருக்கமாக, பூமிக்குரிய ஆலயம் பரலோக ஆலயத்தின் நகல் தான் என்று கூறினார். கிறிஸ்துவின் பரிகார பலியை அவர் வருடாந்திர மகா பாவநிவிர்த்தி செய்யும் நாளில் பூமிக்குரிய பிரதான ஆசாரியர்கள் செய்த வேலையுடன் ஒப்பிட்டார், அப்போது அவர்கள் பலியின் இரத்தத்தை மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் எடுத்து பலிபீடத்தின் மீது தெளிப்பார்கள், இதனால் ஜனங்களுக்கு பாவமன்னிப்பு கிடைக்கும். அதே விதத்தில், இயேசு பரலோகத்திலுள்ள உண்மையான ஆலயத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்து, தம்முடைய இரத்தத்தை பலிபீடத்தின் மீது தெளித்தார். இயேசு சிலுவையில் ஆரம்பித்த பலியின் சடங்கை இது நிறைவு செய்தது. பரலோகத்தில் கிறிஸ்துவின் பரிகார வேலையை எபிரெயர் 9:11-12 விவரிக்கும் விதத்தைக் கவனியுங்கள்:

> கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு … கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும் … தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார் (எபிரெயர் 9:11-12).

மேலும், பரலோகத்திலுள்ள நம்முடைய பிரதான ஆசாரியராக, கிறிஸ்து நமக்காக தொடர்ந்து பரிந்து பேசுகிறார், நாம் பாவம் செய்யும்போது நம்முடைய சார்பாக அவர் செய்த பரிகாரத்தின் பலன்களை தொடர்ந்து வேண்டுகிறார். இறையியலாளர்கள் பொதுவாக பரலோக ஆலயத்தில் கிறிஸ்து இப்போது நமக்காக தொடர்ச்சியாக செய்கிற வேலையை அவருடைய அமர்வு என்று குறிப்பிடுகின்றனர். இந்த அமர்வுதான் நமது இரட்சிப்பைப் பாதுகாக்கிறது. **எபிரெயர் 7:24-25 அவருடைய அமர்வை இவ்வாறு விவரிக்கிறது:**

> இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார். மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார் (எபிரெயர் 7:24-25).

நாம் இங்கே காண்கிறபடி, இயேசு பரமேறுவது அவருடைய மீட்பின் வேலையின் முக்கியமான அம்சமாகும். அது இல்லாமல் நாம் இரட்சிக்கப்பட முடியாது.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதல் பற்றிப் பேசிய பின்னர், தேவனின் வலது பாரிசத்தில் பரலோகத்தில் இருக்கிற அவருடைய சிங்காசனத்தைப் பற்றி பேச நாம் தயாராக இருக்கிறோம்.

## சிங்காசனத்தில் ஏறுதல்

புதிய ஏற்பாட்டில் பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவின் சிங்காசனம் இருக்கிறது என்று பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைக் குறித்த அடிப்படை கருத்து என்னவென்றால், இயேசு நம்முடைய பெரிய மனித ராஜா ஆவார், மற்றும் அவருக்கு பரலோகத்தில் ஒரு சிங்காசனம் உள்ளது, அது பிதாவின் பெரிய சிங்காசனத்தின் வலதுபுறத்தில் இருக்கிறது. இந்த சூழ்நிலையில், பிதா பெரிய ராஜா அல்லது சர்வாதிகார ராஜா ஆவார், மற்றும் குமாரன் அவருக்கு சேவிக்கிற ராஜா அல்லது சிறிய ராஜா ஆவார். இது பண்டைய உலகில் உள்ள ராஜ்யங்களின் மாதிரியைப் பின்பற்றுகிறது, இதன் மூலம் சிறிய ராஜாக்கள் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளை ஆளுவார்கள், மேலும் வரி செலுத்துவதோடு, சக்கரவர்த்திக்கு சேவையையும் செய்வார்கள்.

> பொதுவாக, கிறிஸ்துவின் ராஜரிகத்தைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, அதை மிக உயர்ந்ததாக கருதுகிறோம், ஏனென்றால் இயேசு இப்போது பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார், மற்றும் அவர் ராஜாவாக இருக்கிறார். ஆனால், இயேசு தம்முடைய மனித இயல்பில் ராஜரிகத்தில் மேன்மையடைந்தார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, அவருடைய தெய்வீக இயல்பில், இயேசு எப்போதும் ராஜாவாகவே இருந்தார். அவர் எப்பொழுதும் எல்லாவற்றின் மேலும் சர்வாதிகாரியாக ஆட்சி செய்து கொண்டிருந்தார், ஆனால் இயேசுவுக்கு அவருடைய மனித இயல்பில் வானத்திலும் பூமியிலும் அதிகாரம் வழங்கப்பட்டது. இயேசு தாவீதின் குமாரன், ஆகவே இஸ்ரவேல் தேசத்தையும் தேவனுடைய ஜனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துபவரும் ஆவார். தாவீதின் குமாரனும், தாவீதைப் போலவே, ஒரு சேவிக்கிற



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ராஜாவாக இருந்தார்; அவர் பெரிய ராஜாவான பரலோகத்திலுள்ள பிதாவாகிய தேவனுடைய ஊழியனாக இருந்தார்.

Dr. ரிச்சார்ட் எல். ப்ராட், Jr.

ராஜாவாக இயேசுவை தனது கதாபாத்திரத்தில் குறிப்பிடும் வேத பகுதிகளில், அவர் தனது ஜனங்களுக்காக பரிந்து பேசும் ஒரு ஆசாரியர் என்றும் பேசப்படுகிறார். ராஜாக்கள் பொதுவாக ஆசாரியர்களாக ஊழியம் செய்த பண்டைய உலகின் மாதிரியை இது பின்பற்றுகிறது. உதாரணமாக, ஆதியாகமம் 14 இல் மெல்கிசேதேக்கு ஆசாரியனாகவும் ராஜாவாகவும் இருந்தார்.

பிதாவின் வலது பாரிசத்தில் இயேசுவின் பதவியைப் பற்றி வேதம் பேசும்போது, அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:30-36, எபேசியர் 1:18-23, எபிரெயர் 1:3-9 மற்றும் **1 பேதுரு 3:21-22** போன்ற பகுதிகளில் காணப்படுவது போல, சில சமயங்களில் நம்முடைய மேசியா ராஜாவாக அவருடைய பாத்திரத்தை அது வலியுறுத்துகிறது. இருந்தாலும், மற்ற நேரங்களில், நமக்காக பரிந்து பேசும் நம்முடைய பிரதான ஆசாரியராக இயேசுவின் பாத்திரத்தை வேதம் எடுத்துக்காட்டுகிறது. ரோமர் 8:34 மற்றும் எபிரெயர் 8:1 போன்ற பகுதிகளில் இந்த முக்கியத்துவத்தைக் காண்கிறோம்.

இரண்டு நிகழ்வுகளிலும் அர்த்தம் ஒன்றுதான்: எல்லா சிருஷ்டிப்பின் மேலும் இயேசுவுக்கு அதிகாரமும் வல்லமையும் இருக்கிறது, அதை அவர் பிதாவின் சார்பாக ஆளுகிறார். அந்த நிலையில், அவர் தம் ஜனங்களுக்கு இரட்சிப்பைக் கொண்டுவருகிறார், பிதா அவர்களை ஒரு கிருபையோடு பார்ப்பதை உறுதிசெய்கிறார்.

இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, பரமேறி, பிதாவின் வலது பாரிசத்தில் உள்ள சிங்காசனத்தில் அமர்ந்தபின், கடைசி நாளில் கிறிஸ்து அளிக்கும் நியாயத்தீர்ப்பைப் பற்றி *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* குறிப்பிடுகிறது.

## நியாயத்தீர்ப்பு

இயேசு நியாயத்தீர்ப்போடு வருவார் என்று விசுவாச அறிக்கை கூறும்போது, அவர் அங்கிருந்து வருவார், அதாவது தேவனுடைய வலது பாரிசத்தில் உள்ள அவரது சிங்காசனத்திலிருந்து வருவார் என்று அது கூறுகிறது. எல்லா சிருஷ்டிப்புகளுக்கும் இயேசு மனித ராஜா என்பதும், அவருடைய பிரமாணங்களை மீறியவர்களுக்கும், அவருடைய ராஜரிகத்தையும் ராஜ்யத்தையும் மதிக்காதவர்களுக்கும் எதிராக ராஜ நியாயத்தீர்ப்பை வழங்குவார் என்பதே இதன் கருத்தாகும். லூக்கா 22:30,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 17:31, 2 தெசலோனிக்கேயர் 1:5 மற்றும் 2 தீமோத்தேயு 4:1 போன்ற வேத வசனங்களில் இதைக் காண்கிறோம்.

இறுதி நியாயத்தீர்ப்பில் ஜீவனுள்ளவர்களும் மரித்தவர்களும் பங்கெடுப்பார்கள், அதாவது, இயேசு மீண்டும் வரும்போது ஜீவனுடன் இருப்பவர்கள் உட்பட, இதுவரை வாழ்ந்த அனைவரும் நியாயத்தீர்ப்படைவார்கள். ஒவ்வொரு நபரின் வார்த்தையும், சிந்தனையும், செயலும் தேவனுடைய குணத்தின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படும். கொடூரமான உண்மை என்னவென்றால், ஒவ்வொரு மனிதனும் பாவத்தில் குற்றவாளியாகக் காணப்படுவான், நித்திய மரண தண்டனைக்கு உள்ளாக்கப்படுவான்.

இதில் நற்செய்தி என்னவென்றால், விசுவாசத்தினால் கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டவர்கள் ஏற்கனவே கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் நியாயத்தீர்ப்பைப் பெற்றிருப்பார்கள், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால் ஏற்கனவே நீதிமான்களென்று நிரூபிக்கப்பட்டிருப்பார்கள். ஆகவே, நியாயத்தீர்ப்பில் அவர்கள் நித்திய ஆசீர்வாதத்தையும் சுதந்தரத்தையும் பெறுவார்கள்.

ஆனால் மோசமான செய்தி என்னவென்றால், கிறிஸ்துவில் இல்லாதவர்கள் தேவ கோபத்தின் முழு உக்கிரத்தையும் அவர்களாகவே தாங்க வேண்டியிருக்கும். அவர்கள் என்றென்றுமாக நரகத்தில் தள்ளப்படுவார்கள்.

> இன்று நம் நாளில் கடைசி நியாயத்தீர்ப்பைப் பற்றிய கோட்பாடு மிகவும் பிரபலமாக இல்லை. இருந்தாலும், விஷயங்கள் பெரிதாக மாறவில்லை என்று நினைக்கிறேன், ஏனென்றால் நியாயத்தீர்ப்பு எப்போதும் மனிதர்களுக்கு கவர்ச்சிகரமானதாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. நியாயத்தீர்ப்பு நடைபெறுவது முற்றிலும் இன்றியமையாதது என்று நான் வாதிடுவேன் – கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்காதவர்களுக்கு நித்திய நரகம் இருக்கிறது என்று நாம் அறிவிக்க வேண்டும்.
>
> Dr. தாமஸ் ஆர். ஸ்கிரைனர்

> நரகத்தைப் பற்றி நாம் பேசுவதற்கு இருக்கிற காரணங்களில் ஒன்று என்னவென்றால் அது **உண்மை**யாக இருக்கிறது. நாம் சத்தியத்திலிருந்து தப்பிக்க துணிவு கொள்ளக்கூடாது. நிறைய அரை உண்மைகள் இருக்கின்றன மற்றும் சில நேரங்களில் தொண்ணூறு சதவிகிதம் உண்மை கூட இருக்கிறது, ஆனால் நீங்கள் நன்றாக சுவிசேஷம் கூறப் போகிறீர்கள் என்றால், நீங்கள் சத்தியத்தால் சுவிசேஷம் கூறப் போகிறீர்கள் என்றால், இறுதி நியாயத்தீர்ப்பைப் பற்றி

நீங்கள் பேச வேண்டும். எனவே நாம் நரகத்தைப் பற்றி பேசுகிறோம், அவசியம் அதைப் பற்றி பேச வேண்டும். நரகத்தைப் பற்றி நாம் புரிந்து கொள்ளும் விஷயங்களில் ஒன்று என்னவென்றால், அது யார் நியாயாதிபதி என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. நாம் அல்ல: அவரே. இது நம்முடைய தனிப்பட்ட பொறுப்பைப் பற்றி நமக்கு நினைவூட்டுகிறது. இது அவசரத்தைப் பற்றி நமக்கு நினைவூட்டுகிறது. இது நித்தியத்தைப் பற்றி நமக்கு நினைவூட்டுகிறது. நரகம் போல நாம் பேச வேண்டிய பல விஷயங்கள் உள்ளன, நரகத்தைப் பற்றிப் பேசாமல் சுவிசேஷம் உரைத்தலில் ஈடுபடுவது மிகவும் கடினமாக இருக்கும். ஆகையால் நாம் அதைப் பற்றி பேசுகிறோம். நாம் இதைப் பற்றி அதிகம் பேசுகிறோம், ஏனெனில் இது சத்தியம், நாம் சத்தியத்திலிருந்து தப்பிக்க விரும்பவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

Dr. மேட் பிரைட்மேன்

# முடிவுரை

இந்த பாடத்தில், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி பேசும் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* உள்ள விசுவாச கட்டுரைகளை ஆராய்ந்தோம். அவருடைய தெய்வீக இயல்பு மற்றும் திரித்துவத்தின் மற்ற உறுப்பினர்களுடனான அவரது உறவு உட்பட அவரது முழு தெய்வீகத்தன்மையைப் பற்றியும் நாம் பார்த்தோம். அவரது தெய்வீக மற்றும் மனித இயல்புகளுக்கு இடையிலான உறவு உட்பட அவரது முழு மனிதத்தன்மையைப் பற்றியும் நாம் ஆராய்ந்தோம். அவரது தாழ்மையின் ஆரம்பம் முதல் அவரது இறுதி மேன்மை வரை அவரது வேலையை சுருக்கமாகக் கூறியிருக்கிறோம்.

நம்மை கிறிஸ்தவர்கள் என்று அழைக்கும் எவருக்கும், கிறிஸ்தவத்தை புரிந்து கொள்ள விரும்புவோருக்கும், கிறிஸ்துவாகிய நபரைப் பற்றியும் அவரின் வேலையைப் பற்றியும் நன்றாகப் புரிந்துகொள்வது மிக முக்கியம். இயேசு நம் மதத்தின் மையப்பகுதியாவார் – மற்ற எல்லா நம்பிக்கை முறைகளிலிருந்தும் நம்மை ஒதுக்கி வைக்கும் நபர் அவர். அவர் பிரபஞ்சத்தின் ஆட்சியாளர் ஆவார், மற்றும் வரலாறு அனைத்தும் சுழலும் சுழல்மையமாக இருக்கிறார். அவர் நம் தேவனாகவும் பிரதான ஆசாரியராகவும் மற்றும் ராஜாவாகவும் இருக்கிறார். இரட்சிப்பு என்பது அவரை அறிந்துகொள்வதற்கும்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவரை நேசிப்பதற்கும், அவருடன் ஐக்கியம் கொண்டு ஜீவனைக் கண்டுபிடிப்பதற்கும் குறைவானதல்ல.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.